விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி


*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 122




## புதிய பாப்பரசராக யோசப் ரட்சிங்கர் தெரிவு



(வத்திக்கான்)

புதிய பாப்பரசராக ஜேர்மன் நாட்டின் யோசப் ரட்சிங்கர் நேற்றிரவு தெரிவுசெய்யப் பட்டுள்ளார். வத்திக்கானில் இடம்பெற்ற புதிய பாப்பரசருக்கான வாக்கெடுப்பின்படி பாப்பரசர் தெரிவாகியதையடுத்து வெள்ளைப் புகை வெளியேறிக்கொண்டிருந்தது.

வத்திக்கான் ஆலய மணியும் ஒலித்துக் கொண்டிருந்தது. 265 ஆவது பாப்பரசராக தெரிவுசெய்யப்பட்ட இவர் கடந்த 24 வருடங் களாக வத்திக்கானின் டீன் பதவியில் தலைமை தாங்கி நடாத்தி வந்தவர் ஆவார்.

"ஓர் எளிமையும் பணிவும் உள்ள பணி யாள்" என தன்னை அழைத்துக் கொள் ளும் இவர் தன்னைப் பாப்பரசர் 16 ஆவது பெனடிக் (ஆசீர்வாதப்பர்) என அழைக்கப் படுவதை விரும்புவதாக வத்திக்கான் தக வல்கள் தெரிவித்தன. 11 ஆம் நூற்றாண் டின் பின்னர் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு ஜேர்மனியர் இவர். புனித பேரிதிஸ் மண் டபத்தில் தோன்றி அங்கு கூடியிருந்த பல் லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆசிகளை யும் புதிய பாப்பரசர் வழங்கினார். அவரின் உரை வருமாறு,

"அன்பான சகோதர, சகோதரிகளே பாப் பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப் பருக்கு பின்னர் கர்தினால்கள் என்னைத் தெரிவுசெய்துள்ளனர்.

யேசுவின் பழத் தோட்டத்தின் எளிமை யும் பணிவும் உள்ள பணியாள் நான். உங்கள் தொழுகைக்குள் என்னை பொறுப் பமர்த்திக் கொள்ளுகிறேன்" என அவர் அங்கு உரையாற்றினார்.

கடந்த சனிக்கிழமை அன்று 78 ஆவது அகவையுள் அடியெடுத்து வைத்த இவர் 1981 இலிருந்து மறைந்த அருளப்பர் சின் னப்பருக்கு உதவியாக செயற்பட்டு கொள்கை, கோட்பாடுகளுக்கு உயிருட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-04-08)

### பொதுக் கட்டமைப்பு தொடர்பாக ஆராய

## சொல்ஹெய்ம் - கிறிஸ்ரினா றொக்கா

## நோர்வே தூதரகத்தில் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

**அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங் களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவும் நோர்வே சமாதானச் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இன்று சந்தித்துப் பேசவுள்ளனர். இச் சந்திப்பு நோர்வேத் தூதரகத்தில் இடம் பெறவுள்ளது.**

இச் சந்திப்பின்போது நின்றுபோயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நிலைப் பாடு, யுத்தநிறுத்த ஒப்பந்தம், பொதுக் கட் டமைப்பு, இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை அலகு, கிழக்கில் எழுந்துள்ள ஸ்திரமற்ற பாதுகாப்புச் சூழ்நிலை போன்ற விடயங்கள் குறித்து இருவரும் ஆராயவுள் ளனர். இவர்களது பேச்சுவார்த்தையையடுத்து சுனாமி நிவாரணம் தொடர்பான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக அரசிற்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா வும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மேதினத்தை எழுச்சியுடன் நடத்த பொது அமைப்புக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மேதினத்தை மிக வும் எழுச்சியுடன் நடாத்துவதற்கு ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமிழீழ தேசியத்தை வலியுறுத்தி அரசின் அசமந் தப் போக்கினை வெளிக்கொணரும் வகை யில் மேதினம் நடாத்தப்படவுள்ளது.

மேதினத்தை சிறப்புடன் மேற்கொள் வதற்காக அனைத்து அமைப்புக்களினதும் பிரதிநிதிகளுடனான முக்கிய கலந்துரை யாடல் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தொழிற்சங்கங் கள், கல்விச் சமூகம், தமிழ் மாணவர் ஒன்றியம், (12 ஆம் பக்கம் பார்க்க)

**5 ஆம் தர மாணவர்களுக் கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே...**

## இறுதிக் கட்டத்தில் பொதுக் கட்டமைப்பு

### மட்டக்களப்பில் சொல்ஹெய்ம் தகவல்


(மட்டக்களப்பு)




## ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

# இறுதிக் கட்டத்தில் பொதுக் கட்டமைப்பு

## மட்டக்களப்பில் சொல்ஹெய்ம் தகவல்




(மட்டக்களப்பு)

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பொதுக் கட்டமைப்பு விடயத்தில் 99 வீதப் பணிகள் நிறைவடைந்திருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் .எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்று மட்டக்களப்பிற்கான ஒருநாள் பயணத்தினை மேற்கொண்டு பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

இதன் ஒரு கட்டமாக முஸ்லிம் சம்மேளன பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத். தெரிவித்தார்.

ஆழிப்பேரலை தொடர்பான பொதுக் கட்டமைப்பானது இறுதிக் கட்டத்தினை அடைந்துள்ளது. 99 சதவீதமான பணிகள். வெற்றிகரமான முறையில் முடிவடைந்துள்ளன. எனவே விரைவில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும்.

பொதுக் கட்டமைப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

5 ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் உள்ளே...

## ஜனாதிபதி இன்று நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

தனிப்பட்ட விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலண்டனுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று மாலை நாடு திரும்புகின்றார்.

நாடு திரும்பியவுடன் தற்போது இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவை சந்திப்பார் என எதிர்பார்க்கப்பட்டபோதும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்ஹெய்ம் நேற்று மட்டு. விஜயம் பல்வேறு தரப்பினருடனும் பேச்சு

(மட்டக்களப்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்பிற்குச் சென்று பல்வேறு தரப்பினர்களையும் சந்தித்து தற்போதைய நிலைபரங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை விசேட உலங்கு வானூர்தி மூலம் மட்டக்களப்புக்குச் சென்ற அவர் 23 - 3 ஆவது இராணுவக் கட்டளைத் தலைமையகத்தில் இராணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பின்னர் மண்முனையூடாக கொக்கட்டிச்சோலைக்குச் சென்ற நோர்வேக் குழுவினர் சோலையகத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் பானுவைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் சேவைகள் யாழில் இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

முகமாலை ஏ-9 வீதியூடான தனியார் போக்குவரத்து சேவைகள் நேற்று மூன்றாவது நாளாக ஸ்தம்பிதம் அடைந்தன. கடந்த சனிக்கிழமை யாழ். முகமாலை இடையே சேவையில் ஈடுபட்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்று இருபாலையில் ஏற்பட்ட விபத்துச் சம்பவத்தின் பிற்பாடு எரிக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். முகமாலை ஊடான தனியார் போக்குவரத்துச் (12 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்  கொழும்பு

EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்

தினசரி விமான சேவை

T.P: 021 222 3891/6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

வானத்தில் உங்கள் நண்பன்...

## தற்போதைய அரசியல் கலாசாரம்

# இனங்களிடையே பேதத்தை ஏற்படுத்தும்

(கொழும்பு)

நாட்டில் தற்போதுள்ள அரசியல் கலாசாரம் இனக் குழுக்களுக்கிடையில் பேதங்களை உருவாக்கியுள்ளதாக அரசியலமைப்பு விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

பொரளையில் மேல் மாகாண இணக்க சபைகளின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், இந்த துரதிஷ்டமான நிலைமைகளை மாற்றுவதில கிராம மட்டத்தில் இணக்க சபைகள் பாராட்டத்தக்க பணியை ஆற்றுகின்றன.

நாட்டின் இந்த அரசியல் கலாசாரம் சிங்கள, தமிழ்-முஸ்லிம் இனங்களிடையே பேதங்கள் ஏற்படுவதற்கு அரசியல் வாதிகளினால் உருவாக்கப்பட்ட கலாசாரமேயாகும் எனவும் குறிப்பிட்டார்.

(ற)

# கைத்தொலைபேசிகள் மீட்பு குழப்பத்தில் புலனாய்வுத்துறை

(கொழும்பு)

பொலநறுவ வெருகல் பிரதேசத்தில் நடைபெற்ற தாக்குதலில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்கள் தாக்குதல் நடாத்திய இடத்தில் இருந்து இரண்டு கைத்தொலைபேசிகள், தொலைபேசி இலக்கங்கள் உணர்வுகளைத் தூண்டும் ஆங்கில படங்களை உள்ளடக்கிய புத்தங்கள் உட்பட மேலும் சில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட தொலைபேசியில் இருந்து பல இடங்களுக்கு தொடர்புகொள்ளப்பட்டிருக்கிறது. பல உள்நாட்டு வெளிநாட்டுத் தமிழர்களுடையதொலைபேசி இலக்கங்கள் அதில் உள்ளதாகத் தற்போது தெரியவந்துள்ளது.

தொலைபேசி இலக்கங்கள் ஒவ்வொன்றும் தொடர்பாக தாக்குதல் நடாத்தியவர்கள் மிகத் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு சந்தையைச் சேர்ந்த ஒருவருடைய தொலைபேசி இலக்கத்திற்கு மிரட்டப்பட்டு பணம் கேட்கப்பட்டிருக்கிறது. பல அரச புலனாய்வுப் பிரிவினரின் தொலைபேசி இலக்கங்கள் மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(ற-4)

## இராசி பலன்

**20.04.2005**
**(சித்திரை 7, புதன்கிழமை)**
**ஏகாதசி பிற்பகல் 2.57 மணிவரை**
**பூரம் முழுவதும்**
**இராகுகாலம் 12.02 - 1.32 மணிவரை**
**சுபநேரம் 04.32 - 06.02 மணிவரை**
**அமிர்தம், ஏகாதசி விரதம்.**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, சிறுவியாதி, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம். |
| இடபம் | உடல் நலக்குறைவு, வேலைச்சுமை, காரிய தாமதம், திடீர் நன்மை. |
| மிதுனம் | சகோதரர் உதவி, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், பிரயாணம். |
| கடகம் | வீண் விவாதம், எடுத்தகாரியம் தாமதமாகும், குடும்பக்கவலை, தனவிரயம். |
| சிங்கம் | தெளிந்த சிந்தை, பெரியோர் சந்திப்பு, பித்தரோகம், சயன சுகம். |
| கன்னி | நண்பர்கள் விரோதம், இடமாற்றம், சயன சுகக்குறைவு, தொழில் சிந்தை. |
| துலாம் | நல்ல மரியாதை, தொழில் விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, புதிய தகவல். |
| விருச்சிகம் | அதிக பிரயாசை, நிலை மாற்றம், மேன்மை, காரிய அனுகூலம். |
| தனுசு | கட்டுப்பாடு, பித்தரோகம், வீண்பயம், முயற்சி தாமதம். |
| மகரம் | கடன் தொல்லை, காரிய தடங்கல், பிரயாண பயம், போசன சுகம். |
| கும்பம் | தொழில் நன்மை, மாதர்நட்பு, கீர்த்தி, நற்காரியம். |
| மீனம் | ஜனவசியம், பகைவரால் நன்மை, முயற்சி கைகூடும், பொருள்சேர்க்கை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## வவுனியா சாஸ்திரி கூளாங்குழ

# நலன்புரி நிலையத்தில் வாழும் மக்கள் மீளக் குடியமர்த்துமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா சாஸ்திரி கூளாங்குழ பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலயத்தில் வாழ்ந்து வரும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1997ஆம் ஆண்டு ஜெயசிக்குறு இராணுவ ஆக்கிரமைப்பு நடவடிக்கையின் போது ஓமந்தையின் கல்விக்குளம், வரநாட்டங்கை சிதம்பரம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இருபதெட்டு குடும்பங்களைச் சேர்ந்த இந்த மக்கள் தமது சொந்த இடங்களில் தம்மை குடியமர்த்துமாறு தொடர்ந்தும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்ற போதிலும் அங்கு இரணுவம் நிலைகொண்டிருப்பதால் அவர்களது கிராமங்களுக்கும் செல்ல முடியாதநிலை காணப்படுகிறது.

ஏற்கனவே சேனாலங்கா நிறுவனம் இந்த நலன்புரி நிலையத்திற்கு உதவிகளைச் செய்து வந்த போதிலும் அவர்களின் ஒப்பந்த கால எல்லை முடிவடைந்ததன் காரணமாக அவர்களது உதவிகள் தற்போது இந்த முகாமுக்கு கிடைப்பதில்லை.

இந்நிலையில் வீடுகள் அனைத்தும் படு மோசமாக சேதமடைந்திருப்பதாகவும் மழை நேரங்களில் சிறு பிள்ளைகளுடன் வாழ்வது பெரும் சிரமமாக இருப்பதாகவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனா.

நிவாரண பொருட்கள் நேரகாலத்திற்கு வழங்கப்படாததால் தாம் பல கஷ்டங்கள் எதிர்நோக்குவதாகவும் ஆதலால் தம்மை தமது சொந்த இடத்தில் குடியமர்த்துமாறும் அல்லாவிட்டால் வீட்டுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்தி தம்மை குடியமர்த்துமாறும் அம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(7-5)

## வளர்ச்சி

(கொழும்பு)

இவ்வருடத்தில் முதல் காலாண்டுப் பகுதியில் 3 இலட்சத்து 18 ஆயிரத்து 700 கொள்கலன்களை இலங்கை துறைமுக அதிகாரசபை ஏற்றி இறக்கியிருப்பதாக அறிவித்துள்ளது.

சென்ற வருடம் முதல் காலாண்டுப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 15 சதவீதம் அதிகமாகும்.

அதேசமயம், மொத்த கொள்கலன் நடவடிக்கைகளிலும் 11 சதவீத அதிகரிப்பை துறைமுக அதிகாரசபை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

## 20 ஏழை மாணவருக்கு பிரிட்டன் தமிழர் நிதியுதவி

(தென்மராட்சி)

மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள இருபது மாணவர்களுக்கு பிரிட்டனில் வாழ்கின்ற மூன்று குடும்பங்களின் நிதியுதவியுடன் கல்விவளர்ச்சி நிதி மாதாந்தம் வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியினை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினூடாக வழங்குவதற்கு பிரிட்டனில் வாழ்கின்ற மீசாலை மேற்கைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளதாக லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் தற்போது வாழ்ந்துவருகின்ற இரத்தினகுமார் விஜயரஞ்சனி, வேணுகோபாலன் மைதிலி, ஜெயகான் ஸ்ரீரஞ்சனி ஆகியோரே இருபது மாணவர்களுக்கான நிதியுதவியை வழங்க முன்வந்தவராவார்கள்.

(7-16)

## வருடாந்த மஹோற்சவம்

(புங்குடுதீவு)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 2ஆம் திகதி தேர் உற்சவமும் 3ஆம திகதி தீர்த்த உற்சமும் நடைபெறும். அதே நாள் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-126)

* * *

(அராலி)

அராலி மத்தி உலோலைசிடடி அருள்மிகு விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும் (7)

## கலை இலக்கிய பெருவிழா

(தென்மராட்சி)

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரனையுடன் தென்மராட்சி பிரதேச செயலகம் கலை இலக்கியப் பெருவிழா ஒன்றை நடாத்துவதற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இவ்விழாவை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தில் வாழ்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கலை இலக்கிய நிறுவனங்களுக்கிடையே கவிதை, சிறுகதை, குறு நாடகம், சித்திரம், நாட்டுப்புறப் பாட்டு, நடனம் ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுடையோர் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உரிய படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (7-16)











நொராட் திட்டத்தின் கீழ் யாழ்.மாநகரசபையினால் யாழ்.பிரதான வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் முகாமைத்துப்பிரிவு கட்டடத்தை இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ரோர் குபருட் நாடாவெட்டித் திறந்துவைப்பதையும், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உரையாற்றுவதையும் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் நீ.குமாரதாசன், ரோர் குபருட், யாழ். அரச அதிபர் நோர்வே தூதரகத்தின் இலங்கைக்கான மேலதிக ஆலோசகர் எல்.விஜயானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இந்நிகழ்வில் கலந்துரைகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்:ஞா.ஜங்கரன்

# தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவுதினம் நேற்று யாழில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் அன்னை பூபதியின் 17 ஆவது நினைவுதினம் நேற்று யாழ். குடாநாட்டில் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள கேணல் கிட்டுப் பூங்காவில் இடம்பெற்ற அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு நல்லூர் கோட்ட அரசியல் துறையின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி சசிரேகா வரதராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்ப்பாண பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப பேரவைப் பொறுப்பாளர் சொலமன் சூ. சிறில் மற்றும் யாழ். தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சிவஞானசேகரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றி வைத்தார். தொடர்ந்து ஈகச் சுடரினை யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் த.இளம் பிறையன், அச்சுவேலி பல நோக்கு கூட்டுறவுச் சங்க





முகாமையாளர், மாவீரர் மேஜர் நிறஞ்சனின் தந்தை தம்பிராஜா ஆகியோர் ஏற்றிவைத்தனர். இதனையடுத்து அங்கு குழுமியிருந்த அனைவராலும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து அங்கு அடை





யாள உண்ணாவிரத நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்துவைத்தார். இதில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து கவிஞர் பூபதி புலேந்திரன், மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் செல்வகுமார் ஆகியோரின் கவிதை, பாடல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து யாழ். மத்திய கல்லூரி மாணவர்களதும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களிலும் "தமிழர் புகழ் உலகளாவிய ரீதியில் பெரிதும் புகழ்ந்து பேசப்படுவது அந்தக் காலத்திலா இந்தக் காலத்திலா" எனும் தலைப்பிலான பட்டி மன்றம் நடைபெற்றது.

இதறகு அடுத்தபடியாக நினைவுரைகளும் ஒளிப்படக்காட்சிகளும் பாடசாலை மாணவர்களது நிகழ்வுகளும் இடம்பெற்றன.(ற-19)

## 3 இலங்கை வங்கி கிளைகள் கணனி மயப்படுத்தப்படும்

(பொன்னாலை)

இலங்கை வங்கியின் மூன்று கிளைகள் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நவீன வசதிகளுடன் கூடிய கணனி வலைப்பின்னல் இணைப்பினூடாக தரமுயர்த்தப் படவிருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை, யாழ்ப்பாணம் இரண்டாம் கிளை, திருநெல்வேலிக்கிளை ஆகிய மூன்று கிளைகளுமே தரமுயர்த்தப்படவிருக்கின்றன.

அண்மைக்காலங்களாக வங்கி நடவடிக்கைகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7-49)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

தீவகம் வடக்கு- ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் தலைமையில், உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-49)

# 10.6 மில்லியன் சிறுவர்கள் வருடாந்தம் இறக்கின்றனர்

உலக மொத்த சனத்தொகையில் 10.6 மில்லியன் சிறுவர்கள் ஒவ்வொரு வருடமும் தமது ஐந்தாவது பிறந்த தினத்தைக் கொண்டாட முன்பே மரணமடைகிறார்களென சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார தினத்தையொட்டி அண்மையில் வெளியிடப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ்வருட உலக சுகாதார தினத்தின் குறிக்கோள் "குழந்தைகளையும் கர்ப்பகாலத்தாய்மாரையும் விசேடமாக கவனிப்பதற்கு புதிய அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தல்" என்பதாகும் அந்த வகையில் ஆரம்ப பிள்ளைப் பாராயவிருத்தி நடவடிக்கைகளை கவனமாக மேற்கொள்வது மிகவும் அவசியம் எனவும் இதனை சரியான முறையில் கையாளுவதன் மூலம் சிறுவர்களினதும் குழந்தைகளினதும் மரண விகிதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எல்லா சுகாதார சேவையாளர்களினதும் கடமையாகும் எனவும் அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இன்று உலகில் 90 சத்வீதமான சிறுவர்களின் மரணம் பல பிரதான காரணிகளால் ஏற்படுகிறது நிறைகுறைவாகப் பிறக்கும் குழந்தைகள், பிறந்தது முதல் பிள்ளைகள் மந்த போசாக்கில் காணப்படுதல், உரிய வளர்ச்சியடையாத பிள்ளைகள், குறைமாத பிரசவங்கள், அத்துடன் சிறுவர்களில் தொற்றுக்கள் ஏற்படுதல், நியுமோனியா போன்ற சுவாசத்துடன் தொடர்புடைய நோய்கள் சிறுவர்களில் ஏற்படல், வயிற்றோட்டம் ஏற்படுதல், தாய்மார்களினதும், பிள்ளைகளினதும் மலேரியா நோயின் தாக்கம், சிறுவர்களில் காணப்படும் சின்னமுத்து மற்றும் எச்.ஐ.வி. எயிட்ஸ் போன்ற நோய்கள் முக்கிய காரணிகளாகும்.

இவ்வகையில ஏற்படும் மரணங்களில் அனேகமானவை இலகுவில் தவிர்க்க கூடியவை எனவும் இதற்கு தாய்ப்பாலை குறைந்தது இரண்டு வருடங்களாவது ஊட்டுதல், சரியான முறையில் உரிய தடுப்பு மருந்துகளை வழங்குதல், கர்ப்பகாலத்தில் மலேரியா தடை மருந்துகளையும் உரிய போசாக்கு மாத்திரைகளையும் உட்கொள்ளல், அத்துடன் விற்றமின் ஏ, தடுப்பு மருந்தை சரியாக வழங்குதல், பிரவசத்தின் முன்பு தாயையும் பிரவசத்தின் பின்பு தாயையும் குழந்தையையும் சரியாக கவனித்தல் போன்றவற்றை நல்ல முறையில் நடைமுறைப்படுத்து வது மிகவும் அவசியம் எனவும் அவ்வறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (7-252)

## கலந்துரையாடல்

(பொன்னாலை)

உலகத் தொழிலாளர் தினமான மே தினக் கூட்டம் சம்பந்தமான விரிவான கலந்துரையாடலொன்று இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் தலைவ்ர், செயலாளர்கள் ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பலரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கின்றது.

இக் கலந்துரையாடலில் மே தினம் ஊர்வலம் சம்பந்தமான ஏற்பாடுகள் அதனையொட்டிய செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது. (7-41)


## பிரதேச செய்தியாளர் வெற்றிடம்

பின்வரும் பிரதேசங்களுக்கான செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) தெரிவு செய்யப்படவுள்ளனர்.

| தென்மராட்சி | தீவகம் |
|---|---|
| நெடுங்குளம் (அரியாலை) | மண்டைதீவு |
| நாவற்குழி | அல்லைப்பிட்டி |
| கைதடி | மண்கும்பான் |
| நுணாவில் | வேலணை |
| மட்டுவில் | சாட்டி |
| மீசாலை | சரவணை |
| கொடிகாமம் | கரம்பொன் |
| மிருசுவில் | நாரந்தனை |
| எழுதுமட்டுவாள் | சுருவில் |
| பளை | புளியங்கூடல் |
| கச்சாய் | நயினாதீவு |
| முகமாலை | நெடுந்தீவு |
| | அனலைதீவு |
| | எழுவைதீவு |

தகுதிநிலை

* 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்.
* க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களும், பத்திரிகைத்துறையில் ஆர்வமுடையவர்களும்.
* முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி,பிறந்த திகதி, கல்வித்தகைமை, தே.அ.அ.இலக்கம், கிராமசேவையாளர் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு என்பவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் இரண்டு, கல்விச் சான்றிதழ், தே.அ.அட்டை மற்றும் ஆவணங்களின் போட்டோப்பிரதிகள், புதிய கோவை (பைல்) என்பவற்றுடன், இன்று (20-04-2005) காலை 9.30 மணிக்கும் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி - சங்குநாதம்

15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


# விசர் நாய்க்கடி தடுப்பூசி ஏற்றல்

(கல்வியங்காடு)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட கோப்பாய் மத்தி கோப்பாய் வடக்கு ஆகிய பிரிவுகளில் ஆறு இடங்களில் நாய்களுக்கான விசர் நாய் தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளது.

ஆதலால் கீழ் குறிப்பிடப் படும் இடங்களில் குறிக்கப் பட்ட நேரங்களில் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் இத் தடுப்பூசியை போடுமாறு கோப்பாய் பொது சுகாதார பரிசோதகர் கேட்டுள்ளார்.

கோப்பாய் மத்தியை சேர்ந்த பிரதேசங்களில் தடுப்பூசி ஏற்றப்படும் இடமும் நேரமும் வருமாறு,

இன்று புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து 10 மணி வரை கோப்பாய் அம்மன் கோயிலடி சனசமூக நிலையத்திலும் 10.45 மணியிலிருந்து 12 மணிவரை கோப்பாய் வள்ளியம்மன் சனசமூக நிலையத்திலும் 12.15 மணியிலிருந்து 1.30 மணிவரை காந்தி கிராமம் பொது நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும்.

கோப்பாய் வடக்கை சேர்ந்த பிரதேசங்களில் தடுப்பூசி ஏற்றப்படும் இடமும் நேரமும் வருமாறு,

நாளை வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து 10.30 வரை கோப்பாய் வடக்கு சன சமூக நிலையத்திலும் 10.45 முதல் 12 மணிவரை ஸ்ரீ சபாபதி சனசமூக நிலையத்திலும் 12.45 - 1.30 மணிவரை பூதர் மடம் பொது நிலையத்தில் விசர் நாய் தடுப்பூசி ஏற்றப் படும். (7-74)

## சான்றிதழ் வழங்கல்

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற முறைசாராக் கல்வி தொழிற் பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம் முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நெறியில் கணனி, தட்டச்சு, சாரதி பயிற்சி, வீட்டு மின் இணைப்பு, தலை அலங்காரம், ஆடை அமைப்பு போன்ற பல துறைகளில் பயிற்சிகள் வழங்கப் பட்டன. (7-49)

# யாழ். பஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். பஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக கந்தையா தர்மநாயகம் கடந்த 16 ஆம் திகதி முதல் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஓய்வு பெற்றுச் சென்ற முன்னாள் பஸ் நிலையப் பொறுப்பதிகாரியான ஞா.லோகநாதனின் இடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு 13 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக கொண்ட இவர் வட பிராந்திய போக்குவரத்துச் சபையில் 34 வருடமாக காப்பாளராகவும் திடீர் பரிசோதனைக் குழுத் தலைவராகவும் யாழ். பஸ் நிலைய மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (07)

# பார்த்திப வருட

## கன்னி



சிரித்த முகத்துடன் அழகாக பேசும் உங்களுக்கு ஜீவனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் வரும் 26.05.2005 முதல் லாப ஸ்தானமான 11ஆம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதால் உங்கள் வாழ்வினில் மிகப் பெரிய மாற்றம் உண்டாகும். தொழில் பொருளாதார ரீதியாக கடநதகால சோதனைகள் எல்லாம் முழுமையாக விலக ஏற்ற மிகு பலனை அடைவீர்கள். ஜென்ம ராசியில் சஞ்சரிக்கும் குருபகவான் வரும் 28.09.2005முதல் தனஸ்தானமான 2ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பது பொருளாதார ரீதியாக மிகப் பெரிய ஏற்றத்தினை தரும் அமைப்பு ஆகும். சர்பகிரகமான ராகு கேது (1இல் கேது 7இல் ராகு) சாதகமற்று சஞ்சரிப்பதால் குடும்ப வாழ்வில் சோதனை கணவன் மனைவி இடையில் கருத்து வேறுபாடு கூட்டுத் தொழிலில் உள்ளவர்களுக்கு சங்கடங்கள் பல ஏற்படும் அமைப்பு உண்டாகும். வேலையில்லாத இளைஞர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் அமைப்பு கடந்த கால கடன்கள் வைசலாகும். சிலருக்கு உயர்பதவியினை அடைகின்ற அமைப்பு என எல்லா வகையிலும் ஏற்றம உண்டாகும். சிலருக்கு உயர் பதவியினை அடைகின்ற அமைப்பு உள்ளது. பொதுவாக சனி குரு சஞ்சாரம் அற்புதமாக உள்ளதால் இவ்வாண்டு ஏற்றங்கள் நிறைந்ததாக இருக்கும்.

**உடல் ஆரோக்கியம்:** உங்களுக்கு இவ்வாண்டில முற்பாதியில் உடல் நலம் சாதகமாக அமையாவிட்டாலும் போகப் போக உடல்நலம் சீரடைந்து விடும். மனைவி மற்றும் பிள்ளைகளின் உடல் நலம் சோர்வடைந்தே காணப்படும். படிப்படியாக மருத்துவச் செலவுகள் குறையும். வெளியூர் பயணம் அடிக்கடி உண்டாகி அதிக அலைச்சலை சந்தித்தாலும் 28.09.2005க்கு பிறகு ஓரளவு சாதகமான அனுகூலப் பலனை அடைவீர்கள்.

**குடும்பம் குழந்தைகள்:** குடும்பத்தில் ஒரு குழப்பமான நிலைகளே இருந்து வரும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும் அசயா சொத்து வகையில் செலவுகள் உண்டாகும். பொருளாதார நிலையில் பற்றாக்குறைகளும் கடன் சுமைகளும் உண்டாகும். பிற்பாதிக் காலத்தில் உங்களுடைய சோதனைகள் யாவும் படிப்படியாக விலகி கடன் தொல்லைகளை எளிதாக சமாளித்து விடக் கூடிய வல்லமையை பெறுவீர்கள். திருமண சுபகாரிய முயற்சிகளையும் பிற்பாதியில் மேற்கொள்ள முடியும்.

**உத்தியோக நிலை:** உத்தியோக ரீதியாக மனஉளைச்சலும் வேலை பளுவும் மேலதிகாரிகளின் கெடுபிடிகளும் உங்களை வேதனைப்படுத்துவதாகவே அமையும். எதிர்பாராத இடமாற்றமும் மனவருத்தபபட வைக்கும். புதிய வேலை கிடைக்க இடையுறுகள் உண்டாகும். 26.05.2005க்கு பிறகு சனி லாபஸ்தானத்திற்கு வருவதும் 28.09.2005க்கு பிறகு குரு தனஸ்தானத்திற்கு வருவதும் உங்களது சோதனைகளை படிப்படியாக விலக்கி ஏற்றத்தினை ஏற்படுத்திடும் அமைப்பாகும்.

**தொழில் வியாபாரம்:** இதுவரையிலும் சோதனைகளையே அடைந்துவந்த நீங்கள் இன்னும் சிறிது காலத்தையும் பொறுத்துதான் ஆகவேண்டும். தொடர்ந்து நிதானமுடன் செயல்படுங்கள். வேலையாட்களை மிகவும் கவனமுடன் கையாள வேண்டும். உற்பத்தியில் நிலவிய பாதிப்புகள் பிற்பாதியில் ஓரளவிற்கு சாதகப்பலனை ஏற்படுத்தும், மறைமுக எதிரிகளின் தொல்லைகளும் அலைச்சல் டென்ஷனும் குறையும். ஓரளவுக்கு லாபமும் முன்னேற்றத்தினையும் அடைகின்ற காலமாக பிற்பாதி அமையும்.

**பெண்களுக்கு:** ஆணடின் முன்பாதியில் தேவையில்லாத நெருக்கடிகளையும் குடும்பச் சூழலில் பாதிப்புகளை சந்தித்தாலும் பிற்பாதியில் உங்களுடைய கஷ்டங்களை போக்கிடும் அமைப்பு உள்ளதால் தைரியத்தை கைவிடாதீர்கள். நீண்ட நாடகளாக தடைப்பட்டு வரும் திருமண சுபகாரியம் ஆண்டின் இறுதியில் சிறப்பாக நிறைவேறி மனமகழ்ச்சியினை ஏற்படுத்தும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** வீண் பொலலாப்பினையும் எதிர்ப்புகளையும் வம்பு வழக்குகளையும் முற்பாதியில் சந்திக்க நேரிட்டாலும் பிற்பாதியில் படிப்படியாக நற்பலன்களை அடைகின்ற அமைப்பு உண்டு எதிரிகளின் தொல்லை அதிகமாகி பின் குறையும். பதவிக்கு நெருக்கடியை பிற்பாதியில் எளிதாக சமாளித்துவிட முடியும்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில மிகவும் சிக்கலில் சிக்கிக் கொள்வீர்கள். பெரிய தொகைகள் முன் ஜாமீன இவற்றை கண்டிப்பாக தவிர்த்து விட வேண்டும் பிற்பாதி காலத்தில் படிப்படியான சரளமான நிலையும் வம்பு வழக்கு கடன்களிலிருந்து வீடு படக் கூடிய வாய்ப்பும் அமையும்.

**வ்வசாயிகளுக்கு:** புழு பூச்சிகளால் பாதிப்பு உணடாகும். பொ'ய அளவில் விவசாயப் பணிகளை மேறகொள்வதனை கூடுமானவரை தள்ளிப் போடுவது உத்தமம். அரசு மூலம் வாங்கிய வங்கிக் கடன்களில் கட்டும் போது தாமதநிலை உண்டாகும். பிற்பாதி காலத்தில் நஷ்டங்களை சற்றே ஈடுகட்டும் வகையில் சற்று கூடுதல் விளைச்சலும் விளைபொருட்களுக்கு சுமாரான விலையும் கிடைத்து மன அமைதி உண்டாகும.

**மாணவர்களுக்கு:** கல்வியில் மிகவும் கண்ணும் கருத்துமாக படிக்கவேண்டியது அவசியமாகும். சற்று கவனம் பிசகினாலும் மதிப்பெண் சிறப்பாக எடுக்கமுடியாது. நண்பர்கள் வட்டத்தைக் குறைத்து கொள்ளுங்கள் ஆசிரியர்களிடம் சந்தேகங்களை கேட்டு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். பிற்பாதியில் சாதக பலன்கிட்டும.

**கலைஞர்களுக்கு:** நீங்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்ட வாய்ப்புகளையே முடித்துக்கொடுக்க தாமதப்படுத்துவீர்கள். புதிய வாய்ப்பிளை அளிப்பவர்கள் யோசிப்பார்கள். ஆண்டின் பிற்பாதியில் சற்று சூழ்நிலைகள் மாறி உங்கள் பக்கம் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படுத்தும் அதனை பயன்படுத்தி வெற்றி காணுங்கள்.

### 14.04.2005முதல் 25.05.2005வரை

தொழில் ஸ்தானமான 10ஆம் வீட்டில் சனி, ஜென்ம

## பொதுப் பலன்கள்

ராசியில் கேது 7இல் ராகு சஞ்சரிப்பதால் உங்களுக்கு இக்காலத்தில் ஏற்றத்தினை எதிர்பார்க்க முடியாது. நிலையற்ற வருமானம் உண்டாகி குடும்பத்தில் கஷ்டமான சூழ்நிலையும் கடன்களால் அதிக தொல்லைகளும் உண்டாகும். மனதில் சஞ்சலமும் உடல் நலனில் பாதிப்பும் உண்டாகும். மனைவி மற்றும் பிள்ளைகளின் அதிக மருத்துவச் செலவுகளும் வீண் செலவுகளும் ஏற்படுத்தும். சிலர் அடிக்கடி வெளியுர் பயணம் ஏற்பட்டு அலைச்சல் அடைவார்கள். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. யாருக்கும் முன் ஜாமீன் இருப்பதும் கடன் கொடுப்பதும் சோதனை தரும். திருமண சுபகாரியம் தடைபடும் கணவன் மனைவி உறவு திருப்தியாக இருக்காது. தொழிலிலும் உத்தியோக நிலையிலும் மந்தமான நிலையும் இடையுறுகளையும் சந்திப்பீர்கள். கூட்டுத் தொழில் சாதகமாக அமையாது. அரசியலில் பதவிக்கு நெருக்கடிகள் பெயர் புகழ் பாதிக்கும் அமைப்பும் ஏற்படும்.

### 26.05.2005முதல் 27.09.2005வரை

ஜென்ம குரு நடைபெற்றாலும் லாபஸ்தானத்தில் சனி இருப்பதால் உங்களுக்கு கடந்த கால சோதனை யாவும் உடனடியாக விலகி பிரமாதமான அனுகூலப் பலன்ன அடைகின்ற காலமாகும். உடல் உபாதைகள் மறையும். அலைச்சல் டென்ஷன் குறையும். பலமும் வலிமையும் கூடும். குடும்பத்தில் சுபீட்சமும் சந்தோஷமும் ஏற்படும். கணவன் மனைவி உறவில் நீண்டநாளாக நிலவிய பு,சல்கள் மறைந்து ஒற்றுமை ஏற்படும். விலகிப் போன உறவுகள் மீண்டும் ஒன்று சேருவார்கள். இதுவரை இடையுறுகளை ஏற்படுத்திய மறைமுக எதிரிகளின் தொல்லைகள் மறைந்து தொழில் வியாபார நிலையில் பிரமாதமான அபிவிருத்தியையும் லாபத்தினையும் அடைவீர்கள். கூட்டுத்தொழிலில் நம்பிக்கை பிறக்கும். திருமண சுபகரியம் கைகூடி மன மகிழ்ச்சியை ஏற்படுத்தும் புத்திரபாக்கியம் அமையும் வீடு மனைவி வண்டி, வாகனம் கிட்டும் உத்தியோக நிலையில் தடைப்பட்ட பதவி ஊதிய உயர்வுகளை பெறும் காலமாகவே அமையும்.

### 28.09.2005முதல் 22.11.2005வரை

குரு பகவான் தன ஸ்தானத்திலும் சனிபகவான் லாபஸ்தானத்திலும் சஞ்சரிப்பது மிகவும் உன்னதான அமைப்பாகும். இக்காலம் உங்களுடைய வாழ்வில் பொற்காலம் என்றே சொல்லி விடலாம். உடல்நலம் மிக மிக அற்புதமாகவும் மருத்துவச் செலவின்றி மனைவி மக்கள் சுபீட்சமாகவும் அமைவது பு,ரிப்பினை ஏற்படுத்தும் எதிரிகள் ஓடி ஒளிவார்கள். உங்கள் பலமும் பெயர் புகழ், செல்வம், செல்வாக்கு, கௌரவம் யாவும் உயரக் கூடிய காலமாகும். சேமிப்புகள் பெருகும் ஆடை ஆபரணம் வீடு மனை, வண்டி வாகனம் சேரும் புதிய தொழில் வியாபாரம் தொடங்குவது செய்யும் தொழில் வியாபாரத்தினை அபிவிருத்தி செய்வது பலருக்கு வேலை வாய்ப்பினை அளிப்பது போன்ற அற்புதமான அனுகூலப் பலனை அடைவீர்கள். திருமணம் தடபுடலாக நடைபெற்று ஆண் வாரிசு அமையும். உத்தியோகத்தில் பதவி ஊதிய உயர்வுகளை கௌரவப் பதவிகளும் கிடைத்து பொருமையடை வீர்கள்.

### 23.11.2005முதல் 05.03.2006வரை

தனஸ்தானத்தில் குரு பகவான் சஞ்சரிப்பதால் உஙகளுக்கு சிறப்பான உயர்வினை ஏற்படுத்தும் அமைப்பாகும். தேகநிலை நன்றாக இருந்துவரும். சுறுசுறுப்பும் புத்துணர்வும் கூடும். அன்றாட பணிகளை சிறப்புடன் முடித்து விடுவீர்கள். தற்போது மனமகிழ்ச்சி தரும் புத்திர பாக்கியம் அமையும். பெண்களுக்கு ஆடை ஆபரணம் சேரும் நினைத்த வரையே கைபிக்கும் அமைப்பு ஏற்படும். பொருளாதார நிலை பிரமாதமாக அமையும். வண்டி வாகனம் அமையும் வங்கி சேமிப்புகள் அமையும். அரசியல் வாதிகளுக்கு பெயர் புகழ்கூடும். தொழில் வியாபார நிலையில் எதிர்பார்த்ததை விட சிறப்பான லாபமும் அபிவிருத்தியையும் பெறுவீர்கள். உத்தியோக நிலையில் அதிகாரிகளின் அன்பிற்கும் உதவிக்கும் கட்டுப்படுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் அமையும். கல்வி விளையாட்டுக்களின் பரிசும் பாராட்டும் அமையும் அரசியலில் பதவி ஊதிய உயர்வுகளை பெறுவீர்கள். விவசாயம் சிறப்படையும்.

### 06.03.2006 முதல்13.04.2006வரை

இக்காலத்தில் குரு சனி வக்ரம் பெற்றுள்ளதால் சற்றே நிதானமாக செயல்பட வேண்டிய காலமாகும். உடல்நலனில் சிறிது அக்கறை எடுக்க வேண்டும். மனைவி மற்றும் புத்திரர்களின் வழியில் மருத்துவச் செலவுகள் குறையும் குடும்பத்தில் பொருளாதார நிலை சுமாராக அமையும். பணவரவுகள் சிறு சிறு தடைக்கு பின்பு வரும் கடன்களை படிப்படியாக பைசல் செய்து விடுவீர்கள். கணவன் மனைவி உறவு சிறு சிறு வாக்கு வாதமுடன் அமைந்தாலும் ஒற்றுமை குறையாது. சகோதரர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். தொழில் வியாபார நிலையில் படிப்படியான உயர்வினை அடைவார்கள். கூட்டுத் தொழிலில் கூட்டாளிகளிடம் சற்றே அனுசரித்து போக வேண்டும். கமிஷன் ஏஜன்ஸி காண்டிராக்ட் போன்றவற்றில் நிதானமுடன் செயல்பட வேண்டும். உத்தியோக ரீதியாக பதவி ஊதிய உயர்வுகள் தாமதமாக அமையும் புதிய வேலைகிட்டும் அரசியல்வாதிகளுக்கு உடன் இருப்பவர்களால் சிறு சிறு தொல்லைகள் உண்டாகி மறையும் மாணவர்கள் முயற்சி செய்யவேண்டும்.

### நட்சத்திர பலன்கள்

#### உத்திரம் 2, 3, 4, பாதம்

இவ்வாண்டு முழுவதும் உடல் நலம் நன்றாக அமையப்பெறும். ஆனால் அடிக்கடி தூரப்பயணம் வெளியு,ர் பயணம் மேற்கொண்டு அலைச்சலையும் டென்ஷனையும் சந்திக்கக்கூடிய சூழ்நிலை உண்டாகும். கூடுமானவரை தவிர்த்துவிடுங்கள். பொருளாதார நிலையில் சுமாரான பலன்கள் உண்டாகும். சிலருக்கு நெருங்கிய உறவினர் ஒருவரால் செலவுகள் அதிகரிக்கும் கடன் தொல்லைகள் வருடத்தின் பிற்பாதி காலத்தில் குறையும். தொழில் வியாபாரத்தில் மிகவும் போட்டி பொறாமைகள் உண்டாகி லாபம் குறையும். பிற்பாதியில் உங்கள் பலம் சற்றே கூடி எதிரிகளை சமாளித்து விடும் வலிமை பெறுவீர்கள். அரசியலில் கூடுமானவரை மற்றவர்களை அனுசரித்துப் போனால் பிற்பாதியில் பெயர் புகழ்கூடும்.

#### அஸ்தம்

செய்யும் தொழில் வியாபாரத்தில் சில பி[illegible]னைகளும் போட்டி பொறாமைகளும் சங்கட[illegible]களும் சந்தித்த பின்பே இறுதிகாலத்தில் சற்றே உயர்வினை அடைந்துவிட முடியும். நவீன தொழில் கருவிகளில் சில பழுதடையும். உற்பத்திபாதிக்கும் சிலருக்கு சிவெளியு,ர் வெளிநாட்டுப் பணிகளில் அலைச்சல் உண்டாகும். புதிய வேலை அமைய தாமதிக்கும் பிற்பாதகாலம் உங்களுக்கு எல்லாவகையிலும் படிப்படியான உயர்வும அனுகூலமான பலனையும் அடையக்கூடிய சூழ் நிலைகளை பெறுவீர்கள் திருமண சுபமுயற்சிகளை பிற்பாதியில் நிறைவேற்ற முடியும். கலைஞர்களுக்கு நினைத்த காரியத்தினை முடிக்க தடைதாமம் உண்டாகும்.

#### சித்திரை 1, 2, பாதம்

உடல் நலம் சுமாராக அமையும் மனைவிக்கு சிறு சிறு வயிற்றுக் கோளாறுகள் எற்படும். புத்திர பாக்கியம் பிற்பாதியில் எதிர்பார்க்கமுடியும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்து மன அமைதி குறையும். பொறுமையை கையாண்டால் பிற்பாதியில் சோதனைகள் குறைந்து மனக்குழப்பஙகள் விலகும். திருமண சுபகாரியம் முற்பாதியில் தடைப்படும். பிற்பாதியில் சாதகமாகும். தொழில் வியாபார நிலையில் வேலையாட்களையும் தொழிலாளர்களையும் அனுசரித்துப்போக வேண்டும். பற்பாதியில் புதிய முயற்சிகளை மேற்கொண்டால் ஓரளவு ஏற்றமும் சாதகப்பலனும் உண்டாகும். அரசியல்வாதிகள் பெயர், புகழ் பாதித்து பின்பே மக்கள் செல்வாக்கிளை பெறுவார்கள்.

#### அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட திகதிகள்: 4, 7, 8, 11, 15, 18,26

கிழமை: புதன்

| | |
|---|---|
| நிறம் : பச்சை | தெய்வம்: விஷ்ணு |
| திசை : வடக்கு | கல் : மரகதம் |

**தோஷமும் பரிகாரமும்:** உங்கள் ராசிக்கு ஜென்ம குரு 28 [illegible]2005 முடிய நடைபெறுவதால் குரு பகவானுக்கு [illegible]ரிய மந்திரம் காயத்தியை ஜெபித்து வருவது உத்தமம். ஜென்ம ராசியில் கேது 7இல் ராகு சஞ்சரிப்பதால் துர்க்கை அம்மனுக்கு எலுமிச்சை பழ வளக்கு ஏற்றி ராகுகால புஜையில் பங்கெடுத்து வருவதும் வீநாயகபெருமானை அனுதினமும் தரிசிப்பதும் பாம்புப் புற்றுக்கு பால்வார்ப்பதும் சற்று வசதி படைத்தவர்கள் திரு களாஹஸ்திக்கோ அல்லது ராகு ஸ்தலமான திருநாகேஸவரத்திற்கோ சென்று சர்ப்பசாந்தி பாலபிஷேகம் செய்து வருவதால் குடும்பம் ஏற்றம் பெறும்.

(தொடரும்)

# சதாம் உசேனின் மரணதண்டனை வொரண்டில் கையெழுத்திட மாட்டேன்

## -ஈராக் புதிய அதிபர் தல்பானி

(இலண்டன்)

சதாம் உசேனின் மரணதண்டனை வொரண்டில் கையெழுத்திடமாட்டேன் என்று ஈராக் புதிய பிரதமர் தல்பானி அறிவித்துள்ளார்.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனும், அவரது அரசைச் சேர்ந்த அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு அமெரிக்கப் படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றதாக போர்க் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் மீதான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தில் ஓரிருமுறை விசாரணை நடந்தது. பிறகு பாதுகாப்புக் காரணங்களால் விசாரணை நடைபெறவில்லை.

இந்நிலையில், இந்த ஆண்டு கடைசியில் விசாரணை மீண்டும் தொடங்கும் எனத் தெரிகிறது. இந்த வழக்குகளில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சதாமுக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் மரணதண்டனை கிடைக்கும்.

இதற்கிடையில் ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. அதிபராக குர்து இனததைச் சேர்ந்த தல்பானி பதவி ஏற்றிருக்கிறார். அவர் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

சதாம் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு அதில் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டால் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான வொரண்டில் நான் கையெழுத்திட மாட்டேன் மரணதண்டனையைக் கொள்கை அளவில் நான் எதிர்க்கிறேன்.

எனவே, சதாம் மரணதண்டனை வொரண்டில் நான் கையெழுத்துப் போடமாட்டேன். ஈராக் அதிபராக 3 பேர் இருக்கிறோம் அந்த 3 பேர்தான் முடிவு செய்யவேண்டும். சதாமின் மரணதண்டனை வொரண்டில் கையெழுத்திடும் நேரம் வரும்போது நான் விடுமுறையில் சென்றுவிடுவேன். மற்ற இரு துணை அதிபர்கள் அப்போது முடிவெடுப்பார்கள்.

புதிய அரசின் அனைத்து நிர்வாகிகளும் ஈராக்கின் பெரும்பகுதி மக்களும் சதாமை விரைவில் தூக்கில் போடத் துடிக்கிறார்கள். ஆனால், அதில் நான் மட்டும் வேறுபட்டு நிற்கிறேன். இவ்வாறு கூறினார்.

71 வயதான தல்பானி அரசு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மத்திக்குள ஈராக்குக்குப் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதன்பிறகு டிசம்பர் மாதம் மீண்டும பாராளுமன்றத் தேர்தல் நடக்கும். சதாம் உசேன் மீதான விசாரணை அதற்குள் முடிவடையாது. (ற)

# போதைப்பொருள் கடத்தல் 9 அவுஸ்திரேலியர்கள் கைது

(கான்பெரா)

இந்தோனேஷியாவில் உள்ள சுற்றுலா தீவான பாலியில் போதைப்பொருள் கடத்திய குற்றத்திற்காக ஒன்பது அவுஸ்திரேலியர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தோனேஷியா பாலித் தீவுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் செல்வதுண்டு. இங்குள்ள சுற்றுலா ஹோட்டல்களில் போதைப்பொருள் கடத்தப்படுவதாக இந்தோனேஷிய பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து நடாத்தப்பட்ட தீவிர சோதனையில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு பெண் உட்பட ஒன்பது பேர் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

இவர்கள் அனைவரும் 18 முதல் 29 வயது வரை உள்ளவர்கள். இவர்களிடம் இருந்த எட்டு கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இவர்களிடம் விசாரணை நடத்தியதில் ஹெரோயின் போதைப்பொருளை அவுஸ்திரேலியாவுக்கு கடத்த இருநதது தெரியவந்தது.

இந்தப் போதைப்பொருள் கடத்தலில் இந்தோனேஷியா மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மேலும் பலருக்கு தொடர்பிருப்பதால் அவர்களையும் கைதுசெய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். (ற)

# மயூரணி கொலை வழக்கு பாலபிரசன்னா மேன்முறையீடு

## எதிர்வரும் 25இல் விசாரணை

(மதுரை)

இலங்கை மாணவி மயூரணி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள பாலபிரசன்னா மதுரை ஐகோர்ட் கிளையில் மேன்முறையீடு செய்துள்ளார்.

மதுரை அம்பிகா கல்லூரியில் படித்து வந்த மயூரணி 2003ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டார். இதில் குற்றம் சாட்டப்பட்ட மாணவர் பாலபிரசன்னாவுக்கு மதுரை முதன்மை செஷன்ஸ கோர்ட் கொலை செய்ததற்காக 14 ஆண்டுகளும், பொருட்களைத் திருடியதற்காக 10 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதித்தது. தண்டனையைத் தனித்தனியே அனுபவிக்க வேண்டும் எனவும் கோர்ட் உத்தரவிட்டிருநதமை தெரிந்ததே.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மதுரை ஐகோர்ட கிளையில் நேற்று முன்தினம் பாலபிரசன்னா மேன்முறையீடு செய்துள்ளார்.

அவர் தனது மனுவில்,

எனக்கு தண்டனை கொடுத்த கீழ் கோர்ட் உத்தரவு தவறு. சந்தர்ப்ப சாட்சியங்களை வைத்து தண்டனை தரப்பட்டுள்ளது. இதை இரத்துச் செய்யவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இந்த மனு எதிர்வரும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ற)

## இராணுவ ஆயுத பேர ஊழல்;

# ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீதான நடவடிக்கைக்கு சுப்ரீம் கோர்ட்டு அனுமதி

(புதுடில்லி)

இராணுவ ஆயுத பேர ஊழலில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு சுப்ரீட் கோர்ட்டு அனுமதி வழங்கியுள்ளது.

தே.ஜ.கூட்டணி ஆட்சியின்போது இந்திய இராணுவத்துக்குப் போர் ஆயுதங்கள் வாங்கியதிலும், கார்கில் போரில் இறந்த இந்திய வீரர்களுக்கு சவப்பெட்டி வாங்கியதிலும் ஊழல் நடந்ததாகக கூறப்பட்டுள்ளது. அப்போது இராணுவ அமைச்சராக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இருந்தார்.

இதுதொடர்பாக, தனஞ்சய சவுகன் என்பவர் சுப்ரீட் கோட்டில் ஒரு பொதுநல வழக்கு தொடர்ந்தார். அதில் மத்திய அரசு பிரமாண பத்திரம் தாக்கல்செய்ய சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. மத்திய அரசு தாக்கல்செய்த பிரமாண பத்திரத்தில் போர் ஆயுதங்கள் வாங்கியதில் விதிகள் எதுவும் மீறப்படவில்லை என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைத்தொடர்ந்து அந்தத் தவறைத் திருத்தி புதிய பிரமாண பத்திரத்தை சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தாக்கல் செய்தது. அதில் ஆயுதங்கள் வாங்கியதில் விதிகள் மீறப்பட்டுள்ளன. ஆயுதங்கள் வாங்கியதில் ரூ.8000கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டதாக தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரி கூறியுள்ளார்.

எனவே அப்போதைய இராணுவ அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று கூறப்பட்டிருந்தது.

இந்தப் பிரமாண பத்திரம் சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி ஆர்.சி.லகோட்டி நீதிபதி ஜி.பி.மாத்தூர் ஆகியோர் அடங்கிய பெஞ்சு முன் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது மத்திய அரசு தாக்கல்செய்த 2 பிரமாண பத்திரங்களும் இடையே உள்ள முரண்பாடுகளை மூத்த வக்கீல் ராகேஷ் திவேதி சுட்டிக் காட்டினார்.

குற்றம் சாட்டப்பட்டு இருப்பவர்களுக்கு எதிராக மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்ற விபரம் அடங்கிய மற்றொரு பிரமாண பத்திரத்தை மத்திய அரசு தாக்கல் செய்ய சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அதைத்தொடர்ந்து குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்க ஜூலை 10ஆம் திகதி வரை மத்திய அரசுக்கு அவகாசம் தருவதாகவும், கோடை விடுமுறைக்குப் பிறகு ஜூலை 11ஆம் திகதி கோர்ட்டு திறந்த பிறகு மீண்டும் விசாரணை நடக்கும் என்றும் அதன் பிறகு அவ்வப்போது மத்திய அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் டிவஷன் பெஞ்சு உத்தரவிட்டது. (ற)

# வளரும் நாடுகளில் ஆண்டுதோறும் 11 மில்லியன் குழந்தைகள் இறப்பு

## உலக வங்கி அதிர்ச்சித் தகவல்

வளர்ந்துவரும் நாடுகளில் ஆண்டுதோறும் ஐந்து வயதுக்குட்பட்ட சுமார் 11 மில்லியன் குழந்தைகள் நோய்கள் மற்றும் பல்வேறு காரணங்களினால் இறப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

தொற்றுநோய், வயிற்றுப்போக்கு, அம்மை மற்றும் மலேரியா போன்ற நோய்களால் குழநதைகள் அதிகம் இறப்பதாக உலக வளர்ச்சி குறித்து கண்காணிக்கும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு தீட்டப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அடுத்த 25 ஆண்டுகளில் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கை தடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழந்தைகள் இறப்பு எண்ணிக்கை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையில் பொதும் வேறுபடுவதாகவும் அந்த ஆய்வறிக்கையல் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடுகளுக்குள்ளே சமுதாயத்தில் ஏற்ற - இறக்கங்கள் நிலவுவதே இதற்குக் காரணம் என அந்த ஆய்வறிககை கூறுகிறது.

இதேவேளை, உலகம் முழுவதும் ஏறத்தாழ 100 மில்லியன் குழந்தைகள் கல்வி கற்கப் பாடசாலைகள் போகாமல் இருப்பதாகவும் அவர்களுள் 60 சதவீதம் பேர் பெண்கள் என்றும் உலகவங்கி தெரிவித்துள்ளது. (ற)

# பிலிப்பைன்ஸில வேலைநிறுத்தம்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் பொது போக்குவரத்து நடத்துனர்கள் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் மணிலா மற்றும் பிற நகரங்களின் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

எண்ணெய் விலையேற்றத்தைத் தொடர்ந்து போக்குவரத்துக் கட்டணத்தை 50 சதவிகிதம் உயர்த்த வேண்டும் என அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

அந்நாட்டு போக்குவரத்து இலாகா தறகாலிகமாக உல்லாசப் பயண பஸ்களைப் பயன்படுத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர முயற்சி எடுத்துள்ளது. (ற)

# ஜப்பானிடம் மன்னிப்புக் கேட்க முடியாது

## -சீனா



(பீஜிங்)

சீனாவில் ஜப்பானுக்கு எதிராக நடைபெற்று வரும் கலவரங்களுக்காக, தாங்கள் மன்னிப்புக் கேட்கப்போவதில்லை என சீனா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

சீனாவின் சாங்காய் நகரிலுள்ள ஜப்பானியத் தூதரகத்தின் மீதும், ஜப்பானியர்களின் கடைகள், நிறுவனங்கள் மீதும் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், ஜப்பானியப் பிரதமரின் உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

ஜப்பானியர்களுக்கு எதிரான இந்த நடவடிக்கைகளுக்காக சீனா மன்னிப்புக் கேட்க வேண்டுமெனவும், ஜப்பானியர்களுக்கு நஷ்டஈடு அளிக்குமாறும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளித்த சீன வெளியுறவு அமைச்சர்,

நடக்கும் விஷயங்களுக்கு ஜப்பானே காரணம் எனவும், இரண்டாம் உலகப் போரின்போது நடந்த சம்பவங்களுக்காக ஜப்பான் தான் மன்னிப்புக் கேட்கவேண்டுமெனவும் சீனா மன்னிப்புக் கேட்காது எனவும் கூறினார். (ற)

# சங்கரராமன் கொலை வழக்கு மே.6ஆம் திகதிக்கு ஒத்தி வைப்பு

(புதுடில்லி)

சங்கரராமன் கொலைவழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றக் கோரி உச்சநீதிமன்றத்தில் ஜெயேந்திரர் தாக்கல்செய்த வழக்கு விசாரணை மே 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சங்கரராமன் கொலைவழக்கில் காஞ்சி சங்கர மடாதிபதிகள் ஜெயேந்திரர் மற்றும் விஜயேந்திரர் உட்பட 20க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யபபட்டமை தொ்ந்ததே.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைவருக்கும் சமீபத்தில் குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. குற்றப்பத்திரிகை வழங்கப்பட்ட அன்றே உச்ச நீதிமன்றத்தில் ஜெயேந்திரர் சார்பில் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில் சங்கரராமன் கொலைவழக்கு தமிழ்நாட்டில் நடந்தால் எனக்கு நீதி கிடைக்காது. எனவே இந்த வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு உச்ச நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சி.லகோத்தி மற்றும் ஜி.பி.மாதுர் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்சு விசாரணையை மே 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ற)

# 47அடி இராட்சத அலை

நியூயோர்க்கில் இருந்து புறப்பட்ட நோர்வேக் கப்பல் நடுக்கடலில் சென்றபோது ஏற்பட்ட இராட்சத அலைகள் கப்பலின் 10 ஆவது தளத்தை தாக்கியுள்ளது.

நோர்வே நாட்டு ஆடம்பரக் கப்பல் டான். இது நியூயோர்க்கில் இருந்து 2500 பயணிகளுடன் கடலில் பயணம் புறப்பட்டது. தேன் நிலவு தம்பதியர் உட்பட பலர் இதில் இருந்தனர்.

நடுக்கடலில் திடீர் இராட்சத அலைகள் எழுந்து கப்பலைத் தாக்கின. 47 அடி உயர இராட்சத அலைகள் கப்பலில் 10ஆவது தளம்வரை எம்பித் தாக்கின.

இதில் தளத்தின் கண்ணாடிகள் நொறுங்கியதுடன் கப்பலில் 60 அறைகளில் கடல் நீர் உட்புகுந்தது. கப்பல் கவிழ்ந்து விடுமோ எனப் பலரும் அஞ்சினர். ஆனால் அதிஷ்டவசமாக கப்பல் தப்பிப் பிழைத்தது. சார்ல்ஸ்டன் துறைமுகத்துக்கு கப்பலை பழுதுபார்க்க நிறுத்தினர். பயணிகள் விமானம் மூலம் கொண்டுசெல்லப்பட்டனர். (ற)

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல:04** **ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

♣ **1ஆம், 2ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்பை உடைய இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழே கோடிடுக.**


01.


1) Cஉம் Dஉம் 2) Eஉம் Bஉம் 3) Aஉம் Dஉம்

02.


1) Cஉம் Fஉம் 2) Aஉம் Dஉம் 3) Bஉம் Eஉம்

♣ **3ஆம், 4ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே ஒத்த இரண்டு உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழே கோடு இடுக.**

03.


1) Cஉம் Dஉம் 2) Bஉம் Dஉம் 3) Aஉம் Dஉம்

04.


1) Aஉம் Dஉம் 2) Bஉம் Dஉம் 3) Bஉம் Cஉம்

♣ **5ஆம், 6ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள கூடுகளில் குறுக்காகவும், மேலிருந்து கிழாகவும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லை, எழுத்தைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

05.

| | | |
|---|---|---|
| ம | | கு |
| ப | | தி |
| க | | ரை |

1) த கு தி 2) த ர கு 3) த க் கு

06.

| | | |
|---|---|---|
| ம | | ம் |
| கு | | ம் |
| ப | | ம் |

1) ட 2) த 3) க

♣ **7ஆம், 8ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடிடுக.**

07. மரம், கதவு, சூரியன் 1) அடைமொழி 2)பெயர்ச்சொல 3) வினைச்சொல்

08. அடித்தான், படிப்பான், குடிக்கிறான்
1) வினைமுற்று 2) பெயர் அடை மொழி 3) எச்சம்

♣ **9ஆம், 10ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழே கோடிடுக.**

09. 1) பெரியோர் சொல்கேட்டு நடத்தல் நன்று
2) பெரியோர் சொல்லக்கேட்டு நடத்தல் நன்று
3) நன்று பெரியோர் சொல்கேட்டு நடத்தல்


10. 1) இரக்கமற்றவர்களுடன் பழகுவது தவறு
2) இரக்கமில்லாதவர் பழக்கம் தவறு
3) இரக்கம் குறைந்தவர்களிடம் பழகுவது தவறு


♣ **11ஆம், 12ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழே கோடிடுக.**

11. சிறுவன் ஒருவன் சரியான முறையில் கட்டிய பட்டத்தைக் கொண்டு சென்று பறக்க விட்டான். ஆனால், அது வானத்தில் பறக்கவில்லை. பட்டம் பறக்காமைக்குப் பொருத்தமான காரணம்.
1) பட்டம் சரியின்மை 2) அவனின் நண்பன் இல்லாமை
3) காற்று இல்லாமை

12. கமலன் நல்ல முயற்சியோடு படித்தும் கடந்தகால புலமைப் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1) பரீட்சையின் போது கமலனின் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தமை.
2) பரீட்சையின் போது கமலனினால் சரியான விடைகளை எழுத முடியாமல் இருந்தமை.
3) கமலன் நினைத்ததை விட வினாத்தாள் இலகுவாக இருந்தமை.

♣ **13ஆம், 14ஆம் வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை M குறிப்பிடும் திசை வழி பார்க்கும் போது அது தோன்றும் வடிவத்தைக் காட்டும் விடையின் கீழே கோடிடுக.**

13.



14.



♣ **15ஆம், 16ஆம் வினாக்களில் நான்கு நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கே ஒழுங்கு முறையில் மூன்றாவதாக வரவேண்டிய நிகழ்வைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

15. சிறுவன் பாடசாலை செல்ல ஆயத்தமாகின்றான்.
A. உடைகள் அணிந்தான். 1) A
B. காலை எழுந்தான். 2) B
C. உணவு உண்டான் . 3) D
D. கை, கால், முகம் கழுவினான்.

16. மாணவன் சுற்றுலாச் செல்வதற்கு பெற்றோரிடம் அனுமதி கேட்டான்.
A. தாயிடம் சுற்றுலா போவதாகக் கூறினான் 1) A
B. அப்பா அனுமதி கொடுத்தார். 2) C
C. ஆசிரியர் சுற்றுலாச் செல்வதாக மாணவர்களுக்கு கூறினார். 3) D
D. அப்பாவிடம் கேட்கும்படி கூறினார்.

♣ **17ஆம், 18ஆம் வினாக்களில் தரப்பட்ட சொல் வரிசையில் பொருத்தமற்ற சொல் இடம்பெறும் சொல் வரிசையின் கீழே கோடிடுக.**

17. 1) புத்தகம் கொப்பி கதிரை
2) ஓடுதல் இருத்தல் நடத்தல்
3) பாய் மெத்தை கட்டில்

18. 1) மேளம் மத்தளம் உடுக்கு
2) குறிஞ்சி முல்லை மருதம்
3) பணம் செல்வம் காசு

♣ **19தொடக்கம் 32வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையின் கீழே கோடிடுக.**


19. திருவிழா ஒன்றில் பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் நிற மின்குமிழ்கள் முறையே 25 பூட்டப்பட்டன. இவற்றில் இறுதியாக உள்ள மின்குமிழின் நிறம் யாது?
1) பச்சை 2) சிவப்பு 3) நீலம்

20. வாழைக்குலை ஒன்றில் ஒன்பது சீப்பு பழங்கள் உண்டு. முதல் சீப்பில் 16 பழங்களும் மற்றைய சீப்புக்களில் ஒன்று ஒன்று குறைந்து காணப்பட்டது எனின் ஒன்பதாவது சீப்பில் எத்தனை பழம் உண்டு.
1) 10 2) 8 3) 12

21. என்னிடம் இரண்டு 5 ரூபா நாணயமும் தம்பியிடம் 2 ரூபா நாணயம் நான்கும் இருந்தால் மொத்தமாக எவ்வளவு பணம் உண்டு?
1) 18 2) 5 3) 2

22. அடுத்தடுத்து 31 நாட்களில் முடியும் மாதங்கள் இரண்டும் எவை?
1) தை - பங்குனி 2) ஆடி - ஆவணி 3) தை - மார்கழி

23. நண்பர்கள் 10 பேர் தங்களுக்குள் வாழ்த்துமடல் பரிமாறிக்கொண்டனர். இவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை வாழ்த்துமடல்களை வைத்திருப்பார்கள்?
1) பத்து 2) பதினொன்று 3) ஒன்பது

24.




அருகில் காட்டப்பட்டுள்ள முக்கோணவடிவக் காணியின் சுற்றளவு யாது?
1) 9m 2) 18m 3) 12m

25. பட்டம் என்னும் சொல்  எனவும்


கப்பம் என்னும் சொல்  எனவும் உருக்கள் மூலம் எழுதப்பட்டது. மருதம் என்ற சொல் தரும் உரு.






26. குருவி = 635 எனில் விருகு =
1) 356 2) 536 3) 563


27.



கமலன் கலா தம்பதியினரின் பிள்ளைகளை அருகே உள்ள வரைபில் காண்கிறீர்கள். இங்கு வதனி சாந்தனின் தங்கையாவார்.
மேல் கூறப்பட்ட அட்டவணையில் கமலன் - கலாவின் இளைய பிள்ளையின் பெயர் என்ன
1) வதனி 2) சாந்தன் 3) கண்ணன்


28. இம்முறி கோட்டின் படி மடித்து வெட்டினால் கிடைக்கும் வடிவம்




29. உரு A ஆனது தராசின் இரு பக்கமும் சமமாக உள்ள நிலையைக் காட்டுகின்றது.




இதன்படி உரு B இல் உள்ள தராசை சமன் செய்ய சேர்க்க வேண்டிய உரு,



30. வெற்றிடத்திற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



♣ **கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளுக்கு இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லா உருக்களும் 10 இலும் குறைவான எண் பெறுமானம் உண்டு. அப்பெறுமானத்தை அறிந்து 31ம், 32ம் வினாக்களுக்கு விடை தருக.**



31. இவ்வுருக்களை அவற்றின் பெறுமானதிற்கேற்ப ஏறுவரிசைப்படுத்தினால் வரும் சரியான விடை



32. சரியான தொடர்பை காட்டும் விடையின் கீழ் கோடிடுக.



♣ **33ஆம் 34ஆம் வினாக்கள் பின்வரும் கூடுகளில் உள்ள இலக்கங்களையும் எழுத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டவை.**

33.

| | | |
|---|---|---|
| 2 | 6 | அ |
| ப | 2 | ச |
| 6 | 2 | 2 |
| 2 | 6 | க |

6களின் எண்ணிக்கை 2களின் எண்ணிக்கைக்குக் குறைவாகக் காணப்பட்டால் அ என்ற கூட்டில் x ஐ வரைக. கூடிக்காணப்பட்டால் க உள்ள கூட்டில் x வரைக.

**34.** இக்கூடுகளில் உள்ள 2 களின் கூட்டுத்தொகை 10 ஆயின் ‘ச’ உள்ள கூட்டில் x இடுக. இல்லை எனின் ‘ப’ உள்ள கூட்டில் x இடுக.

35.

| | | |
|---|---|---|
| 6 | 7 | |
| | 5 | |
| 8 | | 4 |

அருகேயுள்ள புதிரைப்பார்த்து மறைந்த இலக்கத்தைக் கண்டு பிடித்து கூட்டில் உள்ள இடைவெளியில் எழுதுக. (எல்லாப் பக்கமும் கூட்டினால்15 என்ற இலக்கம் வருதல் வேண்டும்.)

36.

| | | |
|---|---|---|
| 14 | 16 | 18 |
| 12 | | 8 |
| 2 | 4 | 6 |

வெற்றிடத்திற்குள் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.

(7ஆம் பக்கம் பார்க்க)

# கலை, கலாசாரம் புத்துணர்ச்சி பெற கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டும்

## காரைநகர் அரசியல்துறை பொறுப்பாளர் தெரிவிப்பு

(காரைநகர்)

போராட்ட காலங்களில் சிதைவடைந்த எமது பாரம்பரிய கலை கலாசாரங்கள் புத்துணர்ச்சி பெற வேண்டுமெனில் கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டுமென தமீழ விடுதலைப்புலிகளின் காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கானகன் தெரிவித்திருக்கிறார்.

காரைநகர் மணற்காட்டு முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த வாரம் நடைபெற்ற தேர் வெள்ளோட்ட விழாவில் புதிய சித்திரத்தேரை நிர்மாணித்த சிற்பாச்சாரியார்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றும் பொழுது, கடந்த காலத்தில் எமது மூதாதையர்கள் கட்டிக்காத்த பாரம்பரிய கலாசார விழுமியங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வந்தன. ஆனாலும் எமது மன உறுதியினால் கலாசாரங்கள் அழிவடையாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் இன்னும் மேலும் மேலும் எமது கலைகள், கலாசாரங்கள் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படவேண்டும். இவ்வாறு எமது கலைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் அதனை மூலகர்த்தாக்களான கலைஞர்கள் சிறந்தமுறையில கௌரவிக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர்களைக் கௌரவிப்பதனால் கலைஞர்களிடையே புத்துணர்ச்சி ஏற்பட்டு அவர்களின் கலைப்படைப்புகள் மேலும் வளர்ச்சியடையும். அத்துடன் எமது பாரம்பரிய கலாசாரமும் பாதுகாககப்படும்.

இன்று வெள்ளோட்டம் வந்த சித்திரத்தேரையும் சிற்பங்களையும் எமது கலைஞர்களே படைததுள்ளார்கள். ஒவ்வொரு சிற்பத்திலும் எமது பண்டைய கலாசாரங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றினூடாக தமது கலைத் திறனையும் அவர்கள் வெளிக்காட்டியுள்ளனர். ஆதலால் இவர்கள் பாரட்டப்பட்டு கௌரவிக்கப் படவேண்டியவர்களே. இவர்களை கௌரவிப்பதினூடாக நாமும் கலாசரத்தினை பாதுகாத்த பெருமை கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7-246)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளான திருநெல்வேலி சந்தி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மற்றும் ஆடியபாதம் -கல்வியங்காடு வீதி, கலாசாலை வீதி, நாவலர் வீதி போன்ற பகுதிகளில் நாளை வியாழக்கிழமை காலை 8மணியிலிருந்து கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் பணி நடைபெற உள்ளதாக நல்லூர் பிரதேசசபை உப அலுவலக பொறுப்பதிகாரி எஸ்.தவராசா அறிவித்துள்ளார்.

இப்பகுதியில் அன்றைய தினம் வளர்ப்பு நாய்களைக் கட்டிவைக்குமாறும், வீதியில் திரியும் எந்த நாயும் கட்டாக்காலி நாயாக கருதப்பட்டு நஞ்சூட்டி அழிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களாக பலர் இப்பகுதியில் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெற்று வருவதையடுத்தே இப்பணி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7-252)

## கைத் தொலைபேசிக்கு நூலகத்தில் தடை

(கொழும்புத்துறை)

யாழ்.பொது நூலகத்தினுள் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக அதன் பிரதம நூலகர் தொிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளை வைத்திருப்பவர்கள் அதனை செயலற்ற நிலையில் வைத்திருக்குமாறும் இதுதொடர்பாக நூலக உத்தியோகத்தர்கள் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (7-51)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

துரித தீர்மானங்கள் சில வற்றை மேற்கொள்ளும் நோக்கில் பட்டதாரி பயிலுனர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக பட்டதாரி பயிலுனர்களின் இணைப்பாளர் இரா. அகிலன் தெரிவித்துள்ளார்.

ஆதலால் சகல பட்டதாரி பயிலுனர்களும் இக்கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (7)


விசேட கழிவுக்கட்டணம் புதுவருடத்தை முன்னிட்டு

பிறக்கப்போகும் புதுவருடத்தை முன்னிட்டு வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கு அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப்பொருட்கள் அத்துடன் கடிதங்கள், வீடியோ நாடாக்கள், அல்பங்கள் ஆகியவற்றை உலகின் எந்த நாட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் விரைவாக எம்மால் பொதி செய்து அனுப்பிவைக்கப்படும்.

கட்டண விபரம்

ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், இத்தாலி, ஹொலண்ட் } 1Kg - 650/=

ஏனைய நாடுகளுக்கு (கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா , லண்டன் } 1Kg - 950/=

தொடர்புகளுக்கு:-

RAINBOW TRAVEL &TOURS

32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(அபிநயா நகைமாடத்துக்கு மேல்)

தொலைபேசி - 222 3918, 0777 328219

குறிப்பு:- எமது நிறுவனம் கொழும்பை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்குகிறது.



விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சிகோ கைமணிக்கூடுகளையும்; சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக் கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக , 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். T.P: 222 3226


(..ஆம் பக்க தொடர்ச்சி)

37. A B 1) B
A B 2) A
A □ 3) A B
6 8

38.S.T.R. PM = 643.50 R.T.P. SR = □
1) 354.36 2) 545.30 3) 345.63

❖ குறிப்பிட்ட காலத்தில் ஓர் விளைநிலத்தில் விளைந்த நெல் மூடைகள் பற்றிய தகவல் தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1970 | 40 | மூடை |
| 1975 | 60 | மூடை |
| 1980 | 80 | மூடை |
| 1990 | 120 | மூடை |
| 2000 | | |

39. 1965ஆம் ஆண்டு எத்தனை மூடைகள் விளைந்து இருக்கும்?
1) 40 2) 20 3) 30

40. 2000ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் விளைச்சல் எவ்வளவு?
1) 120 2) 110 3) 140

# தரம் — 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

## வினாத்தாள் இல:03

**கூடிய ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

1. கி.மாதுளா, யா/நெல்லியடி மெதடிஸ்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை.
2. ஓ.நிதூஷன், யா/உடுவில் மகளிர் கல்லூரி.
3. செ.லோசியன், யா/சித்திவிநாயகர் வித்தியாலயம்.
4. செ.நிஷானி, யா/இணுவில் மத்திய கல்லூரி.
5. ஜெ.மதுஷனா, யா/சோதிவேம்படி வித்தியாசாலை.
6. யோ.டனுஷன், யா/சம்பத்திரிசியார் கல்லூரி.
7. மேரி எட்வேட் நிறோஜினி, யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.
8. ஸ்ரீ.ஸ்னேகா, யா/சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை.
9. வி.சிந்துஜன், யா/இணுவில் மத்திய கல்லூரி.
10. ச.சர்மினி, யா/இணுவில் மத்திய கல்லூரி.
11. வி.ஆரணி, யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
12. சி.கோமதி, யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

## வினாத்தாள் 03இன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. (3) | 02. (2) | 03. (1) | 04. (2) |
| 05. (1) | 06. (2) | 07. (5) | 08. (2) |
| 09. (2) | 10. (4) | 11. (3) | 12. (1) |
| 13. (2) | 14. (1) | 15. 440m | 16. 162.50 |
| 17. சிங்கம் | 18. இந்துமதி, கர்ணன். | 19. பந்து, தேசிக்காய் | |
| 20. 120 | 21. 90 | 22. 120 | 23. 23 |
| 24. 72 | 25. M | 26. ◆ | 27. மரியாதை |
| 28. 3 | 29. 2 | 30. 3 | 31. (2) |
| 32. (2) | 33. (3) | 34. (2) | 35. (1) |
| 36. (4) | 37. (2) | 38. (4) | 39. (2) |

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 04

மாணவர் முழுப்பெயர் : ..............................

பாடசாலை முகவரி : ..............................

வீட்டின் முகவரி : ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 26.05.2005 இற்கு முன் அனுப்பிவைக்கவும. உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான வடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வனா இலக்கங்களை சரியாகக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

## மழையைத் தொடர்ந்து பாதீனியம் வளர்ச்சி

அண்மைக்கால மழையைத் தொடர்ந்து மீண்டும் கோப்பாய்ப் பகுதியில் பாதீனியச் செடிகள் பெருமளவில் தழைக்கத் தொடங்கியுள்ளன.

இவற்றை ஆரம்ப கட்டத்தில் அகற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிககையை மேற கொள்ள வேண்டுமெனவும் இல்லாவிட்டால் அவற்றைக் கட்டுப் படுத்துவது சிரமமாகிவிடுமெனவும் அபபகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (7-79)

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் சிவன் அம்மனுக்கான புதிய சிதத்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லை ஆதன குரு முதல்வர், செஞ்சொற்செல்வா ஆறுதிருமுருகன் ஆகியோரும கலந்து கொள்ளவுள்ளனர். (7)

## அநாதரவான நிலையில் ஒரு மாத குழந்தை மீட்பு

மாத்தளை குருநாகல் வீதியில் ஒரு மாத ஆண்குழந்தை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் படவத்தை சுண்ணாம்பு சூளையருகே இடம்பெற்றுள்ளது. அநாதரவாக விட்டுச்செல்லப்பட்டிருந்த இக் குழந்தையை மாத்தளை பொலிஸார் மீட்டு மாத்தளை ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இக்குழந்தை ஒரு மாதத்துக்கு முன்னர் இப்பகுதி வைத்தியசாலை ஒன்றில் பிறந்திருக்க வேண்டும் எனச் சந்தேகிக்கும் பொலிஸார் குழந்தையின் தாயாரைத் தேடிவருகின்றனர். (ந-9)

## விளையாட்டு விழா

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களிற்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

ஈ.எஸ்.பேரம்பலம் அனசன்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இவ் விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் 24ஆம் திகதி கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

காரைந்கர் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸ்ம், சிறப்பு விருந்தினர்களாக ஈ.எஸ்.பி நிறுவன தொழிலதிபர் பே.நாகரத்தினம், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் இ.றோகான் ராஜசிங்க ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக தியாகராஜ மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை, காரைநகர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.கானகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (7-246)

# தேநீர்

இப்போது உலகத்தில் தேநீர் குடிக்காத நாடே கிடையாது. இதன் ஆரம்பம் சீனாதான் என்று தெரிவக்கிறார்கள். தேயிலையின் பயனை விவரித்தும். தேநீரை எப்படித் தயாரிப்பது என்பது குறித்தும் முதன் முதலில் எழுதப்பட்ட புத்தகத்தின் பெயர் Chuchang இதை 'லையு' என்பவர் எடிட் செய்திருக்கிறார். சைனாவில் கன்ஃபூ ஷியஸ். நண்பர்களுடன் தேநீர்விருந்தைப் பகிர்ந்து கொண்டதாக வரலாற்றுப் புத்தகங்கள். செய்திகள் வைத்திருக்கின்றன.

தேநீர் என்கிற இம்மாதிரியான உற்சாக பான குடும்பத்தில் பல நபர்கள் இருக்கிறார்கள். காபி. கோகா. கோலண்ட். மேட். கரானா போன்றவற்றில் தேநீர் ஏதோ அழகான பெண் மாதிரி உலக மக்களை பெரிதும் வசீகரித்திருக்கின்றது.

இதில் இன்னொரு சுவாரசியம். ஒரே குடும்பமாக இவை இருந்தாலும். இதில் கோலண்ட். ஆபிரிக்கர்களின் விருப்ப பானமாகவும். மேட் பராகுவே மக்களின் விருப்பப்பானமாகவும். காபி அமெரிக்கர்களின் விருப்பப் பானமாகவும் தேநீர் சீனா. பிரிட்டன். ஜப்பான் மற்றும் இலங்கை. இந்தியர்களின் விருப்பப்பானமாக்வும் மாறிவிட்டன.

டாக்டர் ஆன்ட்ருலு என்கிற ஜெர்மன் நபர்தான். 1964இல் தேயிலையை அறிவியல் முறைப்படி பயிரிட கற்றுக்கொடுத்திருக்கிறார். நடந்த இடம் ஜாவா தீவுகள். 1959 இல் லண்டனில் முதல் முதலில் ஒரு தேநீர்க்கடை திறக்கப்படடிருக்கிறது. தெருவில் வைத்து தேநீர் விற்கப்படுவதைப் பார்த்து. பலர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். ஒரு தினசரி Road Tea. என்று செய்தி வெளியிட்டிருக்கிறது. 1964இல் ஈஸ்ட் இண்டியா கம்பெனி இந்தியாவுக்கு தேநீரை அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்தியது. இது தவிர பாலில் தேநீர் கலந்து பருகலாம் என்கிற புதுமையை முதன் முதலில் ஸீனியோயு என்கிற டச்சு எழுத்தாளர் தான் கற்றுக் கொடுத்திருக்கிறார். தேநீருடன் பிஸ்கட். கேக்குகளை பரிமாறுவதை பெட் போர்டில் ஒரு பிரெஞ்சுப் பெண்மணி உலகத்துக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். தேநீர் விருந்து ஜப்பானியர்களின் கலை.



தேநீரில். காபியில் இருக்கிற நசசுப் பொருள்களான காபினும், டேனிக் ஆஸிடும் இருக்கின்றன. ஆக. கெடுதல்கள் காபி போலவே இருந்தாலும். இவை சதவிகிதத்தில் குறைந்திருப்பதால். மனித உடல் தப்பிக்கிறது. காபியை விட தேநீரில் இருக்கிற மிக முக்கியமான நல்ல விஷயம். அதில் மிதந்து பரவுகிற Anti oxidant பொருள்கள்.

இது உடலில் இருந்தால் மாரடைப்பு வருவது தடுக்கப்படுகிறது என்பதுதான் புதிய ஆய்வு முடிவு. இப்போது மருத்துவர்கள் இம்மாதிரி சுடுபானப் பிரியர்களுக்கு வடமுடியாவிட்டால் உறிஞ்சச் சொல்லிப் பரிந்துரைப்பது. நல்ல தேநீரை.

இந்தியாவில் என்னென்ன வகை தேயிலை நீர் கிடைக்கிறது என்கிறவர்களுக்கு பதில் மூன்று. ஒன்று டார்ஜலிங் தேநீர் தங்க நிறத்தல் காட்சி தருகின்ற இதுதான் இருப்பதிலேயே உடலைக் கெடுக்காத தேநீர். பிரிட்டீஷ் மக்களுக்கு மிகப் பிரியமானது.


இரண்டாவது அஸ்ஸாம் தேநீர். இதுதான் இருப்பதிலேயே ஸ்ட்ராங்கானது. சிலருக்கு இது கிக் கூட ஏற்படுவதாகக் கூறு கிறார்கள். இது வட இந்தியர்களின் விருப்பம். மூன்றாவது நீல்கிரீஸ் தேநீர். நடுத்தரம். இது தவிர. பெய ரில்லாத வகை ஒன்று இருக்கிறது. அதில் குப்பை. மண். சேறு மற்றும் மனிதனால் சாப்பிட முடியாத பலவும் கலந்து. கலப்படமாக நம் தெருக் கடைகளுக்கு வந்து பரபரப்பாக விற்பனையாவது பெரும்பாலும் நாம் கடைகளில் இதைத்தான் குடிக்கிறோம் (வாந்தி வருவதைக் கட்டுப் படுத்திக்கொண்டு). தேநீர் தயாரிக்கப்படுவதிலும் சிலவகை இருக்கின்றன. ப்ளாக் தேநீர் என்கிற கறுமைத் தேநீர்.

தேயிலை விருந்தின் மிகப் பழைய வடிவம். பிறகு ஆயுர் வேதர்கள் கண்டுபிடித்தது லெமன் தேநீர். இதை சில மருத்துவர்கள் காலையில் வெளியில் போக முடியாமல் சிரப்பட்டவர்களுக்குப் பரிந்துரைத்தார்கள். அடுதது வந்தது தேன தேநீர். மேலும் சில வடிவங்கள் புழக் கத்தில் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

சரி தேநீர். என்னென்ன கெடுதல் செய்கிறது என்பதை விடுங்கள். என்னென்ன நல்லது செய்கிறது. மிக மக்கியமாக நல்லது. மாரடைப்பு வருவதைத் தடுக்கிறது.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 57

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'புரட்சிக் கலைஞர்' என வர்ணிக்கப்படும் சீனியர் ஹீரோக்களில் ஒருவரான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கச்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 57**
**வலம்புரி ~ சங்குநாதம்**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-57**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முகவரி | :-........................ |
| | ........................ |
| | ........................ |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 55 சரியான விடை**





**நேபாள மன்னர் ஞானேந்திரா**


**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 55இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | |
|---|---|
| முதற் பரிசு | :~க.மனோகரன், கைதடி மேற்கு, நாவற்குழி, |
| இரண்டாம் பரிசு | :~சி.திவ்வியன், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. |
| மூன்றாம் பரிசு | :~சி.கோவிந்தராஜன், 423 பருத்தித்தறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

கே.அரசேஸ்வரன், யாழ்ப்பாணம். வே.குமாரசுவாமி, கரவெட்டி. இ.வசந்தினி, ஏழாலை. திருமதி.P.செல்வராணி, சங்கானை. வே.சுபாஷினி, கட்டுடை. சி.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. க.கபிலன், நீர்வேலி. R.இராஜகாந்தி, கொக்குவில். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. கி.தர்சனன், பருத்தித்துறை. சி.விவேக், கந்தர்மடம். இ.இளங்கோ, உடுவில். சி.கலாதேவி, தெல்லிப்பளை. சி.சிறீலக்ஸ்மன், யாழ்ப்பாணம். லோ.அபிராமி, வல்வெட்டித்துறை. அ.அனித்தா, வடலியூர். தி.ஜதுஸா, காரைநகர். மா.பாக்கியலட்சுமி, பருத்தித்துறை. ம.மயல்வாகனம், கரவெட்டி. த.தினேஷ், மல்லாகம். பா.பவித்திரா, சாவகச்சேரி. கா.கந்தசாமி, சுழிபுரம். ம.கயல்விழி, தாவடி. பா.பரஞ்சோதி, மானிப்பாய். வ.விதுஷன், யாழ்ப்பாணம். கா.கனஸ்ரா, தம்பசிட்டி. த.கல்பனா, சங்கானை. வ.சயிலதா, கந்தர்மடம். க.பரணி, வேலணை. ப.பார்தீபன், அச்சுவேலி. ச.தையல், யாழ்ப்பாணம். இ.கவிதா, நாவாந்துறை. ச.நிரஞ்சன், கொட்டடி. ந.மாலதி, மயிலிட்டி. க.பாலச்சந்திரன், வியாபாரிமூலை. சி.தவச்செல்வன், பருத்தித்துறை. ம.கல்யாணி, வட்டுக்கோட்டை. ச.மயில்வாகனன் தம்பசிட்டி. வ.சயந்தன், கொடிகாமம். வனிதர்சன், கொக்குவில். அ.கோமதி, ஆனைக்கோட்டை. நா.சிந்து, சுதுமலை.

# மயக்கும் இனிப்பு



பண்டிகை என்று வந்து விடடால் இனிப்புகள் இல்லாமல் போகாது. ஒருவருக்கொருவர் இனிப்புகளை வழங்கி மகிழ்வர். வீட்டுக்கு வீடு இப்படி நடைபெறுவது வழக்கம்தான். நம் வாயைக் கட்ட வேண்டிய நேரமாகவும் இது உள்ளது.

குறிப்பாக முதியவர்கள் இது குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வாயைக் கட்டாமல் தின்றுவிட்டு அதற்கு மருத்துவம் பார்ப்பது அறிவுடமையல்ல.

உண்பதற்கு ஏற்றதாக இல்லாத உணவுப் பண்டங்களைத் தவிர்த்து விட்டு, உடல் நலத்திற்கு ஏற்றவை எவை. செரிமானத்தை எளிதாக்கி வயிற்றுக்கு நலம் செய்பவை எவை என்று அறிந்து உண்ணவேண்டும் அப்போதுதான் வாழ்வு பொருளுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் ஆகும்.

இனிப்புகளை எப்போதும் புதிதாகவே உண்ணவேண்டும். கவர்ந்திழுக்கும் விதத்தில் உள்ள இனிப்புகளைக் கண்டுமனம் மயங்கக் கூடாது. இனிப்புகளை நிறைய செய்து குவித்து மாதக்கணக்கில் வைத்துக் கொள்வதையும், பாதுகாப்பின்றி எல்லோருக்கும் எட்டும் இடத்தில் வைப்பதும் சரியல்ல. வரும்போதும் போகும்போதும் அவற்றைப் பதம் பார்த்துவிட்டு, வயிறு சரியில்லை, பசியில்லை என்று புலம்பக்கூடாது.

இனிப்பு வகைகளில் செயற்கை நிறங்களையும், சுவையூட்டிகளையும் சேர்ப்பது குறித்து எச்சரிக்கை தேவை. அவை பார்வைக்கு நன்றாக இருக்கலாம். ஆனால் அவற்றில் உடலுக்கு நலம்செய்யும் எதுவும் இருப்பதில்லை. ஊட் டங்களும் இருப்பதில்லை.

# ஐஸ்கிறீம் சாப்பிடலாமா?

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பிச் சாப்பிடுவது ஐஸ்கிறீம். ஆனால் அதைப் பற்றி எப்போதுமே ஒரு உள் பயத்தை கிளப்பிவிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஐஸ்கிறீம் சாப்பிட்டால் வரும் நோய்கள் என ஒரு பட்டியலே போட்டுச் சொல்வார்கள்.

அதெல்லாம் பொய், ஐஸ்கிறீம் நல்ல சுகாதார முறையில் தயாரிக்கப்பட்டதாக இருந்தால் எந்தத் தீமையும் செய்வதில்லை. சில குழந்தைகளுக்கு ஜலதோஷம் வருகிறது. இது ஐஸ்கிறீம் சாப்பிடுவதால் அல்ல. எப்படிச் சாப்பிடுவது என்பது தெரியாததால்தான். ஐஸ்கிறீம் சாப்பிட கொடுக்கும் ஸ்பூனைப் பாருங்கள். எவ்வளவு சிறியது. அதில் கொள்ளும் அளவுக்கு கொஞ்சமாக எடுத்து, நாக்கின் மீது வைத்து, அது உருகி நீராகும் வரையில் வாயிலேயே வைத்திருந்து விழுங்க வேண்டும். ஐஸ்கிறீம் தொண்டை தாங்கிக் கொள்ளும் அளவுக்கு வெது வெதுப்பாக உள்ளே போவதாக இருந்தால் தொண்டையை அது பாதிக்காது.


சைனசிட்டீஸ், தொண்டைப் புண், ஜலதோஷம் இருப்பவர்கள் கூட ஐஸ்கிறீம் சாப்பிடலாம். டான்சிலிட்டிஸ் ஆபரேஷன் முடிந்தவுடன் ஐஸ்கிறீம் சாப்பிடத்தானே டாக்டர் சொல்கிறார்.

வெயிலில் அலைந்துதிரிந்து வியர்வையோடு இருக்கும்போது ஐஸ்கிறீம் சாப்பிடாதீர்கள். கொஞ்ச நேரம் இளைப்பாறிய பின் சாப்பிடலாமே.

நேரம், காலம் பார்க்காமல் ஐஸ்கிறீம் சாப்பிடுவதாலும் கெடுதல் இல்லை. பாதுகாப்புக்கு வேண்டுமானால் சாப்பிட்டபின் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீர் குடிக்கலாம்.

ஐஸ்கிறீமின் இனிப்பு பற்களை தாக்கலாம். எனவே, வாய் கொப்பளித்துக் கொள்ளலாம். இரவு படுக்கப் போகும் போது fluoride கலந்த பேஸ்டினால் பல் துலக்குங்கள். அதிக எடை போட்டு விடுவோம் என்று பயப்படுபவர்களைத் தவிர மற்றவர்கள் தாராளமாக ஐஸ்கிறீம் சாப்பிடலாம்.

# மீள்பார்வை



## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 43



பத்திரங்கள்

22. 1) சபாநாயகர். அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் மாத்திரமே பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்

2 ) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் கூட்ட அறிக்கையில் பதிவு செய்யப்படல்வேண்டும்.

3) பத்திரங்கள் சமர்ப்பிக்கையில் அவற்றின் உள்ளடக்கம் பற்றி சிறிய விளக்கக்கூற்று சமர்ப்பிக்கப்படலாம். ஆனால் சமர்ப்பிக்கும்போது விவாதம் நிகழலாகாது.

4) சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் சபாபீடத்தில் இடப்படுமாறு கட்டளையானவையாகக் கருதப்படுவதுடன் அவற்றை அச்சிடக்கோரும் எப்பிரேரணையும் திருத்தமோ விவாதமோ இன்றித் தீர்மானிக்கப்படும்.

*முன்னறிவித்தல்கள்*

23. 1) முன்னறிவித்தல் கொடுக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்ட கேள்விகள் அல்லது பிரேரணைகள் பற்றிய முன்னறிவித்தல்கள் எழுத்துமூலம் செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்டுக் கொடுக்கப்படல் வேண்டும் பாராளுமன்றம் அமரும் நாட்களில் எந்நேரத்திலும் அத்தகைய முன்னறிவித்தல்களைச் செயலாளர் நாயகத்திடம் கொடுக்கலாம். அல்லது எந்நேரத்திலும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பலாம். அல்லது அங்கு கொடுக்கலாம்.

2) சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலன்றிச் செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாக் கேள்விகளும் அத்தகைய அறிவித்தல் கொடுத்த தினத்திலிருந்து ஏழு முழுநாட்களுக்கு முற்படாத ஒரு தினத்திற்கு விடையளிக்கப்படுதற்பொருட்டு ஒழுங்குப்புத்தகத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

எனினும் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றுடன் தொடர்புள்ள கேள்வியொன்று கேள்விகள் முடிவடையும் போது சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் போதுமான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர் எதிர்க் கட்சித் தலைவரினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவரினாலோ கேட்கப்படலாம்.

3) சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலன்றி செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாப் பிரேரணைகளையும் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்த்தல்வேண்டும் ஆனால் பாராளுமன்றம் பிறவாறு கட்டளையிட்டாலன்றி முன்னறிவித்தல் செய்து ஐந்து முழு நாட்கள் கழியுமுன் அவற்றின் மீது விவாதமெதுவும் நிகழமுடியாது இப்பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பொது அலுவல் ஆரம்பத்தின் போது பிரேரிக்கப்படவுள்ள பிரேரணைகளின் முன்னறிவித்தல்கள் முன்னைய அமர்வுநாளில் சபாபீடத்தில் கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றை ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்தல் வேண்டும்.

4) எவ்விடயத்திற்கும் முன்னறிவித்தல் கொடுப்பதில் விவாதம் நிகழலாகாது.

5) இந்த நிலையியற் கட்டளைகள் பிறவாறு அனுமதித்தாலொழிய ஒழுங்குப் பத்திரத்திற் காணப்படும் ஒரு பிரேரணை மீதோ அல்லது ஒரு தினப்பணிப்பு மீதோ அல்லாது ஒரு விவாதம் நிகழலாகாது.

6) கேள்வி அல்லது பிரேரணை பற்றிய முன்னறிவித்தல் கொடுத்த ஒரு உறுப்பினர் அதனைச் செயளலாளர் நாயகத் துக்கு எழுத்து மூலம் முன்னறிவித்தல் கொடுத்து மீட்கலாம்.

24. நிலையியற் கட்டளைகள் பிறவாறு பணித்தாலன்றிச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள எப்பிரேரணைக்கும் முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும் பின்வருவன புறநடைகளாகும்.

1) முழுப்பாராளுமன்றக் குழுவில் பிரேரிக்கப்படும் ஒரு பிரேரணை

2) பாராளுமன்றத்தை அல்லது ஏதாவது விவாதத்தை ஒத்திவைப்பதற்கான பிரேரணை.

3) தெரிகுழுவொன்றின் அறிக்கையை முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தலோ அல்லது அச்சிடவோ கோரும் ஒரு பிரேரணை.

4) புறத்தோரை வெளியேற்றுவதற்கான ஒரு பிரேரணை

5) ஓர் உறுப்பினரை இடைநிறுத்தி வைக்கக்கோரும் ஒரு பிரேரணை

6) ஒரு சிறப்புரிமை விடயத்தை ஒட்டி ஒரு பிரேரணை

7) ஒரு தினத்தில் அலுவரொன்று முடிவாக்கப்பட்டவுடனும் வேறு புதிய விடயங்கள் ஆரம்பிக்கப்படு முன்னரும் அவ்வலுவலிலிருந்து விளையும் ஒரு பிரேரணை.

24. மற்றெல்லாம் பிரேரணைகள் தினப்பணிகள் ஆகியவற்றிலும் பார்க்கப் பாராளு மன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஓர் அவசரப் பிரேரணை முன்னீட்டையும் வாக்கெடுப்பு நிகழ்ந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்ந்த வேறு எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஒரு விடயம் அண்மையில் தோன்றியிருக்கும் போது சிறப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரேரணை மூலம் பாராளுமன்ற நடவடிக்கை இடைமறிக்கப்படலாம்.

*மனுக்கள்*

25. அ.(1) பாராளுமன்றத்திற்குச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் சபாநாயகருக்கு முகவரியிடப்பட்ட ஒரு மனுவடிவத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு மனுவும் ஓர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2) ஒவ்வொரு மனுவும் மதிப்பான வார்த்தைகளில் இருத்தல் வேண்டுமென்பதுடன் பொருத்தமற்ற கூற்றுக்களைக்கொண்டிருந்தலுமாகாது.

3)ஒவ்வொரு மனுவும் தெளிவாகவும் வாசிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் கோருவதான நிவாரணத்தை எடுத்துரைக்கும் வேண்டுதல் ஒன்றுடன் அது முடிதலும் வேண்டும்.

4) நோய் காரணமாக இயலாமை விடயத்தில் தவிர ஒவ்வொரு மனுவும் மனுதாரால் அல்லது மனுதாரர்காலால் ஒப்பமிடப்படுதல் வேண்டும் எழுத இயலாத ஆள் ஒருவர் சாட்சியொருவரின் முன்னிலையில் தனது அடையாளத்தை இடுதல் வேண்டும் மனு ஒன்றின் கையொப்பகாரர் ஒவ்வொருவரினதும் முழுப்பெயரும் முகவரியும் அதில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5) மனு எதனோடும் கடிதங்கள் சத்தியக்கடாதாசிகள் அல்லது பிற ஆவணங்கள் எதனையும் இணைத்தல் ஆகாது.

6) மனுவொன்றில் பாராளுமன்ற விவாதம் எதனையும் குறிப்பிடுதலாகாது.

7) உறுப்பினர் ஒருவர் தன்னுடைய மனுவொன்றறைச் சமர்ப்பிக்கத் தகுதி வாய்ந்தவராதலாகாது ஆனால் அதனைப்பிறிதோர் உறுப்பினர் சமர்ப்பிக்கலாம்.

8) ஒவ்வொரு மனுவும் சமர்ப்பிக்கப்படு முன்னர் அதன் ஆரம்பத்தில் அதற்குப் பொறுப்பாயிருக்கும் உறுப்பினரால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குறைந்த பட்சம் இரு முழு நாட்களுக்குச் செயலாளர் நாயகத்திடம் அதனை இட்டு வைத்தல் வேண்டும் செயலாளர் நாயகம் அதனை அங்கீகாரத்துக்கெனச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டாலன்றி மனு எதுவும் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

9) மனு ஒன்றைச் சமர்ப்பிக்கும் உறுப்பினர் ஒருவர் பின்வரும் முறையிலான கூற்றொன்றுக்கு தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சபாநாயகர் அவர்களே!.......... என்னும் இடத்தைச் சேர்ந்த

(முகவரி)

....................என்பவரிடமிருந்து:. ஏனைய .................. ஆட்களிமிருந்தும் வந்துள்ள (மனுதாரரின் பெயர்) மனு ஒன்றைச் சமர்ப்பிக்கிறேன்.

இக்கூற்றின் மீது விவாதம் எதனையும் அனுமதித்தல் ஆகாது.

10. மனு ஒன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டால் அது பொது மனுக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தியதாதல் வேண்டும்.

(தொடரும்)

# புடவைக் கைத்தொழில் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மாகாணம் உட்பட நாடு பூராகவுமுள்ள புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கு 2005/2006 ஆம் கல்வியாண்டில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கைத்தறி நெசவு தொடர்பான இரு வருடப் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன விண்ணப்பதாரிகளுக்கான ஆகக் குறைந்த கல்வித்தகைமை எட்டாம் தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும் பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவும் சீருடையும் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆர்வமுள்ளவர்கள் மாவட்டங்கள் தோறும் அமைக்கபட்டுள்ள புடவைக் கைத்தொழில் பாடசாலைக்ளுக்கு உரிய சான்றிதழ்களுடன் சென்று தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (7)

# புலிகளின் குரல் சேவை விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரல் தனது ஒலிபரப்புக் களை திருகோணமலைக்கும் விஸ்தரித்துள்ளது.

புலிகளின் குரலின் நிகழ்ச்சிகளை திருகோணமலையில் 104 எவ்.எம். அலைவரிசையில் தெளிவாகக் கேட்க முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ரு-4)

# சுனாமி பீதியை ஏற்படுத்தி உல்லாசப் பயணியிடம் திருட்டு

(காலி)

காலி மாவட்டத்திலுள்ள உனவட்டுன என்ற இடத்தில் வெளிநாட்டுப் பெண்ணிடமிருந்து இரண்டு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் பெறுமதி வாய்ந்த பொருட்களும் திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இத்தாலி நாட்டைச்சேர்ந்த இப்பெண் தங்கியிருந்த விடுதி அறைக்கு மீண்டும் சுனாமி வருவதாக தொலைபேசி மூலம் அறிவித்தல் கொடுத்த திருடர்கள் அப்பெண் பீதியுடன் அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னர் அவரது பணம் மற்றும் பொருட்களை அபகரித்துச் சென்றுள்ளனர். (7)

# சாவகச்சேரிப் பகுதியில் குடிநீர் விநியோகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு நிக்கொட் திட்டத்தின் நிதியுதவியுடன் குழாய் மூலமான குடிநீர் விநியோகம் மிகவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கென சாவகச்சேரி நகரசபை அலுவலக வளவில் பாரிய நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நகர சபையின் நகர் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் மூலம் பொதுமக்கள் தமக்குத் தேவையான குடி நீரைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினைப் பெறவுள்ளனர்.

இதேவேளை, சாவகச்சேரி நகர சபை நிர்வாகம் இத் திட்டத்தினை நகர்ப்புறத்துக்கு மட்டும் என மட்டுப்படுத்தியுள்ளமை சாவகச்சேரியிலுள்ள வட்டார வரியிறுப்பாளர்களின் அடிப்படைத் தேவையை அலட்சியம் செய்துள்ளது என சபையின் வரியிறுப்பாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர்.

இருந்த போதிலும் இத்திட்டத்தினை அமுல் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு நிதியே ஒதுக்கீடு செய்ப்பட்டுருப்பதால் ஏனைய வட்டாரங்களுக்கு இத்திட்டத்தினை விரிவுபடுத்த இயலாமல் போயுள்ளதாக சபையின் நிர்வாக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ( 7-16,49)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## (தேசிய பாடசாலை)
## முறைசாராக் கல்விப் பிரிவு

**முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

**மேற்படி பிரிவின் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்லூரிப் படிப்பை விட்டு வெளியேறிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் கல்லூரியில் உள்ள விண்ணப்பப்படிவத்தை 19.04.2005 லிருந்து பெற்று 25.04.2005 திங்கட்கிழமைக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அன்றித் தபால் மூலமோ விண்ணப்பிக்க முடியும்.**

**பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி:- 30.04.2005**

**பாடநெறிகள்**

01. கணனி அடிப்படைக் கற்கைநெறி (*Ms word, Ms Excel*) (6 மாதம்)
02. கணனி தட்டச்சுப் பயிற்சிநெறி (ஆங்கிலம், தமிழ்) (6 மாதம்)
03. வீட்டு மின்னிணைப்பு (6 மாதம்)
04. சாரதிப் பயிற்சிநெறி (இலகுவாகனம்) (3 மாதம்)
05. வள்ளங்களுக்கான வெளி இணைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல் (6 மாதம்)
06. மின் ஒட்டுவேலைப் பயிற்சி (6 மாதம்)

**குறிப்பிட்ட நெறிகளுக்குக் குறைவாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் அப்பாடநெறிகள் இரத்துச் செய்யப்படும்.**

க.இராசதுரை
அதிபர்.

(C/1235)

# இன்று ஒரு தகவல்

## நல்லபெயர் வாங்குவது எப்படி?

"நான் நிறைய நல்ல காரியங்கள் செய்து கெண்டிருக்கிறேன் இருந்தாலும் எனக்கு ஒரு பெரியகுறை என்றார். ஒருவர் என்ன குறை?" என்று கேட்டார். இன்னொருவர் என்னை யாருமே நல்லவன் என்று சொல்வதில்லை அது தான் குறை" என்றார் அவர்.

நல்ல செயல்களைச் செய்வது வேறு, நல்லவன் என்று பெயரெடுப்பது வேறு நல்லபெயர் வாங்குவது என்றால் சும்மாவா? அது சரி எல்லோரிடமும் நல்லபெயர் வாங்குவது எப்படி? இதற்கு ஒரு அனுபவசாலி (டேல் கார்னர்) சில வழிகளைச் சொல்கிறாா அப்படியாவது நல்லபேர் வாங்க முடிகிறதா என்று பார்ப்போம அவர் இதற்கு முக்கிய மாக எட்டுவழிகளைக் கூறுகிறார். எவை நம்மால் முடிகிறதோ அந்த வழியிலெல்லாம் போய் பார்க்கலாம்.

அவர் கூறும் முதல் வழி மற்றவர்களை உண்மையாகவே பாராட்டுவதற்கு பழகவேண்டும் என்கிறார். நம்மில் பலர் எப்படி என்றால் அடுத்தவர்கள் ஏதாவது நல்ல காரியம் செய்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு பதிலாக அவர்கள் மீது பொறாமைப்பட ஆரம்பித்து விடுகிறோம். அல்லது அவர் களோடு பேசுவதை நிறுத்தி விடுவோம் அதனால் நமது பேரும் கெட்டுப்போகும் உடலும் கெட்டுப்போகும்.

பிறர் மீது உண்மையாகவே அக்கறைகொள்ள வேண்டும் என்பது இரண்டாவது வழி உங்கள் பக்கத்தில் இருப்பவருக்கு லேசாகத் தலைவலி அதற்கு உங்களிடம் மருந்துள்ளது அப்படி இருந்தால் அதில் ஒன்றைக் கொடுத்து உதவுங்களேன் என்ன குறைந்து விடப்போகிறது ஒருக்கால் அந்தத் தலைவலியே நீங்கள் பக்கத்திலிருப்பதனால் தான் அவ ருக்கு வந்திருக்கலாம்.

அடுத்தவர்கள் ஒரு தவறு செய்துவிட்டால் அதை மறை முகமாக சுட்டிக்காட்டவேண்டும் "ஐயையோ இப்படி செய்து விட்டீாக்ளே" என்று ஆரம்பிக்கக்கூடாது தவறு என்பது திருத் திக்கொள்ளக் கூடியதுதான் என்பதை அவருக்கு உணர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும் "பரவாயில்லை இனிமேல் இது போல நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்". என்று கூறுவேண்டும்.

உங்களுக்கு எதிரில் இருப்பவர்களை அலட்சியப்படுத்தக கூடாது அவரும் முக்கியமானவர்.தான் என்பதை அவரே உணரும் அளவுக்கு நீங்கள் நடந்து கொள்ளவேண்டும் அதறகு என்ன செய்யலாம்? அவருடைய ஆலோசனைகளையும் அடிக் கடிகேளுங்கள் "இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர் கள்?" "நான் கூறுவது சரியா?" என்று கேளுங்கள் அவரை யும் பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள் நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்காதீர்கள் அவர் பேசுவதையும் பொறுமையாக கேளுங்கள் அப்போது தான் உங்கள் மீதும் அவருக்கும் ஒரு நல்லபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண்டிருக்கிறீர் கள். அது போன்ற வாக்குவாதங்களிலிருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதிலிருந்து ஒதுங்குவது தான் நல்ல வழியாம் நழுவுதற்கு நமக்கு

# இலங்கையில் ஜிகாத், அல்-கெய்டா தீவிரவாத அமைப்புகள் இயங்குவதாக ஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஜீகாத் அல்கெய்டா ஆகிய சர்வதேச பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுதவதாக ஜாதிக ஹெல உறுமயக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசும் படைத்தரப்பும் இது குறித்து அவதானம் செலுத்தவில்லை என்றும் ஹெல உறுமயக்கட்சி கவலை தெரிவித்துள்ளது.

பொத்துவில் புத்தர் சிலை விவகாரம் குறித்து கருத்துத்தெரிவிக்கும்போது ஹெல உறுமயக்கட்சியின் பிரதித்தலைவர் கலாநிதி ஒமல்பே சோபித்த தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

படைத்தரப்புக்கு அதிகாரங்கள் போதியளவு வழங்கப்படாத காரணமாகவே தமிழ்பிரிவினைவாதிகள் முன்னேக்கிச்செல்கின்றனர். படைத்தர்ப்புக்கு போதிய அதிகாரங்கையும் சுதந்திரத்தையும் வழங்கியிருந்தால் பிரிவினை வாதிகள் முற்றாக அழிந்து பல காலமாகியிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொத்துவில் விவகாரம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில பொத்துவில் புத்தர் சிலை விவாகரத்துடன் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கத்திற்கு தொடர்புள்ளதாக விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. உல்ல பிரதேசத்தில் பெரும்பான்மையாக சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இதன்போது புத்தர் சிலை அமைப்புப் பணிகளை அவர்களால் எவ்வாறு எதிர்க்க முடியும்? என வினா எழுப்பினார்.

இந்த நாட்டில் எந்த இடத்திலும் புத்தர் சிலை அமைக்க பௌத்த மக்களுக்கு உரிமை இருக்கின்றது என அவா மேலும் தெரிவித்தார். (ற-4)

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதில் ஜே.வி.பியினர் கடும் தீவிரம்

## ரொய்ட்டர் செய்தியில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கைத் தீவகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஒவ்வொரு கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிராகரித்து வரும் நிலையில் யுத்தம் தொடர்பான பதற்றமும் அதிகரித்து வருவதாக சர்வதேச செய்தி ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் ஐரோப்பிய, ஆபிரிக்க பயணங்கள் தொடர்பாக செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ள ரொய்ட்டர் செய்தி நிறுவனம் நேற்று முன்தினம் இத் தகவலைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை அரசின் இவ்வாறான நடவடிக்கை தொடர்ந்தால் மூன்று வருட காலமாக பேணிப்பாது காக்கப்படும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துவிடும் என்று நோர்வே அனுசரணையாளர்கள் அச்சப்படுவதா ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் பொதுக்கட்டமைப்பானது இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு நல்ல விடயம் என்று ஜனாதிபதி சந்திரிகா அண்மைய தமிழ்-சிங்கள புத்தாண்டின் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அக்கட்டுரையில்,

விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதில் இலங்கை அரசின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி மிக வேகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்பு உள்ளிட்ட இருதரப்பு சர்வதேச நிதிப் பகிர்வுக்கான தீர்வு உடனே நிகழத்தக்கதல்ல என்று சர்வதேச கொள்கை வகுப்பாளர்கள் கருதுவதாகவும் ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

(ற-4)

# கைதிகளுக்கு தொழிற் பயிற்சி

(கொழும்பு)

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு புனர்வாழ்வு அழிப்பதற்காக தொழிற் பயிற்சிகளை பெற்றுக்கொடுக்க பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில்,கைதிகளுக்கு விவசாயம், தச்சுத்தொழில்,தையல் ஆகியனவற்றில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயற்திட்டத்தின் மூலம் கைதிகளுக்கு வருமானம் பெறக்கூடியதாக இருக்கும் என நதியமைச்சின செயலாளர் ஜோன் செனவிரத்தின தெரிவித்தார். (ற-9)

# பொலநறுவை தாக்குதலில் காயமடைந்தோர்

# சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்களா?

பேசுவதற்கு ஊக்கப்படுத்துங்கள் நீங்கள் மட்டுமே பேசிக் கொண்டிருக்காதீர்கள் அவர் பேசுவதையும் பொறு மையாக கேளுங்கள் அப்போது தான் உங்கள் மீதும் அவருக்கும் ஒரு நல்லபிப்பிராயம் வரும்.

ஒரு கடுமையான வாக்குவாதம் செய்து கொண் டிருக்கிறீர் கள்.அது போன்ற வாக்குவாதங்களிலிருந்து சிறந்த பலன் பெறவேண்டுமென்றால் அதிலிருந்து ஒதுங்குவது தான் நல்ல வழியாம் நழுவுதற்கு நமக்கு சொல்லியா தரவேண்டும்? அது தான் எமக்குக் கை வந்த கலையாயிற்றே.

இன்னுமோர் விடயம் என்ன என்றால் அடுத்தவர் களை மகிழ்ச்சியடையவைப்பதன் மூலம் நாமும் மகிழ் வடைகிறோம் என்பதை நன்கு புரிந்து கொள்ளவேண்டும் சிலருக்கு அடுத்த வர்களை அதிர்ச்சியடையு வைத்து வேடிக்கை பார்ப்பதி லேயே ஒரு தனி சுவாரஸ்யம்.

இன்னொரு முக்கியமானவிடயம் ஒருவருக்கு அவரது பெயர் மட்டும்தான் மிக இனிமையான வார்த்தை என்பதை ஞாபகபபடுத்தி வைத்திருக்கவேண்டும் அதனால் அவர்களை பெயரை எழுத்தும் போதும் கூறும் போதும் சரியாக கூறவேண் டும் சரியாக எழுதவேண்டும் அது அவர்களுக்கு சந்தோஷ மாக இருக்கும்.

நல்ல பெயர் வாங்குவது எப்படியென்பதற்கு ஒரு வெளி நாட்டு நிபுணர் கூறியிருக்கும் யோசனைகள் இவ்வளவும் இதை இன்று உங்களிடம் கூறுவதற்கு முன்பு இன்னொருவரிடம் கூறிக் கொண்டிருந்தேன் அந்த அம்மா ஒரு நான்கு நாள் கழித்து கோபமாக என்னிடம் வந்தார்.

“சார் !நீங்கள் கூறிய யோசனைகளில் ஒரு கருத்தை மட்டும் கடைப்பிடித்துபார்த்தேன் அதனால் எனக்கு நல்ல பெயர் வரவில்லை கெட்டபெயர்தான் வந்தது” என்றார் “என்ன செய்தீர்கள்?” என்றேன் என் கணவரை அவரது பெயரை சொல்லி அழைத்தேன் என்றார் “நமது பழக்கவழக்கத்திற்கு அது சரியாக இருக்காதே என்றேன் “அவர் பெயரைக் கூறியதில் கூட அவருக்கு வருத்தமில்லை அதைச் செல்லமாக சுருக் கிக் கூப் பிட்டேன் அது தான் அவருக்கு வருத்தம் என்றார் “அவ ரது முழுப் பெயர் [illegible]மி என்றார் அவர்

# பொலநறுவை தாக்குதலில் காயமடைந்தோர்

# சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படுவார்களா?

(கொழும்பு)

பொலனறுவை வெருகல் பிரதேசத்தில் அண்மை யில் நடைபெற்ற தாக்குதலில் பலர் காயமடைந்து பொலனறுவை மருத்துவமனையில் அதி உயர் இரா ணுவ பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் இலங்கையின் பாதுகாப்புச் சட்டத்தை மீறி இருக்கிறார்கள் பல கொலைகளை அரச கட் டுப்பாட்டுப் பிரதேசத்தில் செய்துள்ளனர்.

ஆயுதங்களுடன் நடமாடி இலங்கையின் இயல்பு நிலையினை பாதிப்புக்குள்ளாக்கி இருக்கினறனர். எனவே இவர்களை பொலிஸார் சட்டத்தின் முன்னால் நிறுத் துவார்களாக?என்று பலரும் கேள்வி எழுப்பி வருகின் றனர். பல தடவை இதற்கு பதில் கூற மறுக்கும் இலங்கை அரசாங்கம் இத்தாக்குதல் தொடாபாக தொடர்ந்தும் மௌனம் காத்து வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் மௌனம் மர்மக் கொலை களை தமது படைகள் மேற்கொள்கின்றது என்பதை ஏற்றுக்குக்கொள்வதாக அமையுமா என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ரு-4)

## அடையாளக் கட்டைத் திருட்டால் மிதிவெடி அகற்றலில் பின்னடைவு

(தென்மராட்சி)

தெல்லிப்பளை பிரதேச செயலா் பிரிவிலுள்ள ஜே/ 215 இலக்க சீனன்கட்டி கிராமசேவையாளா் பிரிவில் உள்ள பாடசாலைப்பகுதியில் மிதிவெடிகள் அகற் கும் சர்வதேச நிறுவனம் ஒன்றினால் நாட்டப்பட்ட மிதி வெடி அடையாள கட்டைகள் தொடர்ச்சியாக களவாடப் பட்டுவருகின்றன.

மார்ச் மாதம் 15ஆம் திகதி இத்தகைய 265 அடை யாள கட்டைகள் காணமால்போயுள்ளதாக கூறப்படு கிறது. இதனால் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடு பட்டு வருகின்ற சர்வதேச நிறுவனம் அதன செயற்பாடு களை பின் தள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதேதே சமயம் மிதிவெடிகள் அகற்றும் மனிதாபி மானப்பணியில் ஈடுபடும் நிறுவனத்திற்கு எதிராக இத் தகைய விரோதமான நடவடிக்கையில் ஈடுபடுவர்கள் குறித்து உரிய கண்காணிப்புக்களை மேற்கொள்ளும் படி தெல்லிப்பழை உதவிப்பிரதேச செயலா் க. முரளி தரன் சீனன்கட்டி கிராம சேவையாளரை பணித்துள் ளார்.

யாழ். மாவட்டத்தில் ஹலோ டிரஸ்ட் நிறுவனம் டென் மார்க்குழு மற்றும் இராணுவ பொறியியல் பிரிவு ஆகியவை மிதிவெடி அகற்றும் மனித நேய நடவடிக் கையில ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-16)

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி

## பண மோசடி செய்த மூவர் கல்முனையில் கைது

(கல்முனை)

கல்முனையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக் களை வெளிநாடு அனுப்புவதாகக்கூறி பணமோசடி செய்யத மூன்று நபர்களை கல்முனைப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 78 கடவுச் சீட் டுகள் மீட்கப்பட்டுள்ள்தாக கல்முனை குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எ.எம். ஜம் மின் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மதவாச்சி கெக்கிராவ அலவத்துக்கொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர் கள் என்று கல்முனைப்பொலிஸ் தலைமையகம் தெரி வித்துள்ளது.

இவ்களுக்கு எதிராக பொலிஸில் செய்யப்பட்ட முறைப் பாடுகளை அடுத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர். (ரு-9)

நன்மையும் தீமையும் நாடி புலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும் - குறள்

வலம்புரி

## இனவாதத்தைத் தூண்டும் சிங்கள ஊடகங்கள்

இலங்கையில் மிக நீண்டகாலமாக நீடிக்கும் இனப்பிரச்சினைக்கான காரணங்களைக் கண்டறியும் பொருட்டு செய்யப்பட்ட ஆய்வுகளில் தகவல் ஊடகங்களின் தவறான போக்குகள் முதன்மை பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

தகவல் ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை மக்களுக்கு வழங்கியமை, நடு நிலைமையோடு செய்திகளை வெளியிடாமை போன்றவை காரணமாக இன ஒற்றுமை அழிக்கப்பட்டது.

சிங்கள மக்களால் தமிழ் மக்கள் தாக்கப்பட்ட போது அதற்கு எதிராக குரல் கொடுத்திருக்க வேண்டியது ஊடகங்களின் பிரதான பணியாகும்.

இங்கு தாக்கியவர் யார்? தாக்கப்பட்டவர் யார் என்ற கேள்விகளுக்கு இடமே இருத்தலாகாது. ஆனால் தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகைகளும் ஒலி, ஒளிபரப்பு நிலையங்களும் சிங்கள மக்களுக்கு சாதகமாக - தமிழ் மக்களுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டன.

தகவல்களை அறிவதற்கு தனித்து ஊடகங்களை மட்டும் நம்பியிருக்கும் சிங்கள மக்கள் தமது ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளை அப்படியே நம்பின. அதன் காரணமாக தமிழர்கள் தமக்கு எதிரானவர்கள் என்ற முடிவுக்கு வந்தனர்.

இந் நிலைமை இன்றுவரை நீடிக்கவே செய்கிறது. தமிழ் மக்கள் இந் நாட்டின் வந்தேறு குடிகள் என வரலாற்றை விரிவுபடுத்தி எழுதி அதனை பாடப்புத்தகங்களிலும் வெளியிட்டு சிங்கள மாணவர்களிடையே தமிழர்களுக்கெதிரான வுக்கிரத்தை ஏற்படுத்திய சிங்கள புத்திஜீவிகளின் புரியாத்தனம் இன்று நாட்டையே அழித்து விட்டது.

அதிலிருந்து மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய சிங்கள ஊடகங்களோ வீடு எரிக்கின்ற ராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரிகளாக செயற்படுகின்றன.

இவ்விதம் தென்னிலங்கையிலிருந்து வெளிவரும் செய்தி ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை தொடர்ந்து வெளியிட்டு வருவதன் காரணமாகவே சமாதான முயற்சிக்கு மக்களின் முழுமையான ஆதரவைப் பெற முடியாது உள்ளது.

அதாவது ஜே.வி.பி. போன்ற இனவாதக் கட்சிகள் கடந்த தேர்தல்களில் பெற்றுக்கொண்ட ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தமைக்கு சிங்கள ஊடகங்களே காரணம் எனலாம்.

குறித்த ஊடகங்கள் தெரிவிக்கின்ற செய்திகளை நம்பிக்கொள்ளும் சிங்கள மக்கள், தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளையே ஆதரிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றன. இந்த முடிவு காரணமாக தமிழ் மக்களுக்கு விரோதமான - சமாதானத்துக்கு எதிரானவர்கள் பாராளுமன்றம் சென்று விடுகின்றனர்.

இதன் விளைவு நாட்டில் இரத்த ஆறு ஓடுவதாகவே இருக்கும். இலங்கை பௌத்த சிங்கள தேசம். இந்த மண்ணை தமிழர்களின் குருதியால் அபிஷேகம் செய்யவேண்டும் என விரும்பும் சிங்கள ஊடகங்கள் சமாதானத்திற்கு எதிராகச் செயற்படுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றன.

இதன் ஒரு வடிவமே விடுதலைப் புலிகளிடம் நீர் மூழ்கி படையணியும் நீருக்கடியில் செல்லக் கூடிய படகும் இருக்கின்றன என்ற மிகப் பிந்திய செய்தியாகும்.

# கூட்டமைப்பு அரசை தகர்த்து பதவியை தன்பக்கம் இழுக்க முனைகிறார் ரணில்

## அமைச்சர் மங்கள

(கொழும்பு)

**எதிர்க் கட்சித் த்லைவர் ரணில் விக்கிரமசிங்க தான் உண்டு தன்வேலை உண்டு என்றிருக்காமல் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைத் தகர்க்க முனைகிறார். அதன் மூலம் அரசு பதவியை தன்பக்கம் இழுப்பதே அவரின் பிரதான திட்டமென ஊடகத்தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித்தலைவர் தனது நெருக்கமான ஊடகங்களைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றுக்கிடையிலான கூட்டணியினை உடைக்க முனைகிறார் என நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் அமைச்சர் மங்கள சுட்டிக்காட்டியுள்ளார்.

சமகால அரசியல் வரலாற்றில் கூடுதலான தேர்தல்களில் தோல்வியினை எதிர்கொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சதி முயற்சிகளிலேயே தற்போது ஈடுபட்டு வருகிறது.

எப்படியிருப்பினும் எதிர்க்கட்சித் தலைவரின் இம் முயற்சியானது நீர்க்குமிழி போன்றதாகும். ஆனால் எமது கூட்டணி அரசாங்கத்தை எதிர்க்கட்சித்தலைவர் மட்டுமல்ல எவராலும் தகர்க்க முடியாது.

ஊடக நிறுவன உரிமையாளர்கள், வர்த்தக விளம்பரங்கள ஊடாகவும் அரசாங்கத்தைத் தாக்க முனைகின்றனர். அமைச்சாகளாக அநுரபண்டார நாயக்க லக்ஷமன் கதிர்காமர் ஆகியோரையும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவையும் இலக்கு வைத்துத் தாக்குதலகள் நடாத்தப்படுகின்றன.

இவ்வாறான எந்தவொரு முயற்சிகளாலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு எவ்விதத்திலும் தைரியத்தை இழக்கமாட்டாது எனவும் அமைச்சர் மங்கள வெளியிட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4)

## 50 ரூபா இலஞ்சத்திற்கு 2 வருட கடூழியச்சிறை

(கொழும்பு)

பேருவகொட பகுதியில் ஐம்பது ரூபாவை இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு இரண்டு வருட கடூழியச சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ் உத்தியோகத்தர் 500ரூபா அபராதத்தைச் செலுத்த வேண்டும் இல்லாவிட்டால் மேலும் ஆறு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினாலேயே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் இவ்வாறான இலஞ்சம் பெறும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது (ந-8)

## கும்பாபிஷேகம்

(பொன்னாலை)

சாவகச்சேரி- மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச் சாட்டி பூதவராய விநாயகர் கோயில் மகாகும்பாபிஷேகம் எதிர் வரும 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் கடந்த 18ஆம் திகதி காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந-19)

## அரும்பொருள் காப்புமையம் பூநகரியில் திறக்கப்படும்

(பூநகரி)

1993 ஆம் ஆண்டு பூநகரியில் நிலைகொண்டிருந்த இலங்கை இராணுவத்தின் மீது தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொளளப்பட்ட தாக்குதலில் தாக்கியழிக்கப்பட்ட போர்த் தாங்கியை மையப்படுத்தி பூநகரியில் அமைக்கப்பட்ட அரும்பொருள் காப்புமையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்கினை தமிழீழ அரசியல் துறையின் அரும்பொருள் காப்பு மையம் மேற்கொண்டு வருகிறது.

பூநகரியில் பழமை வாய்ந்த கோட்டையில் இதர பொருட்களும் காணப்படும் சூழலில் அரும்பொருள் காப்புமையம் பூநகரியில் திறந்து வைக்கப்படுவது சிறப்பம்சமாகும்.

1991 ஆம் ஆண்டு பூநகரியை ஆக்கிரமித்த படையினா பல தொன்மை வாய்ந்த பொருட்களைப் பூநகரியில் அழித்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

## 30 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து ஈழத்தமிழ் அகதிகள் 30 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாக இவர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவ்வாறு நாடு திரும்பியவர்களுக்கு இந்தியாவிலுள்ள இலங்கை பிரதித் தூதரகம் அவசர கடவுச்சீட்டுப் பத்திரங்களை வழங்கியுள்ளது. நாடு திரும்பியவாகள் திருகோணமலை, மன்னார் போன்ற மாவட்டங்களைச் சோந்தவர்களாவார்கள். இந்தியாவிலிருந்து இதுவரை மூவாயிரத்து 800 அகதிகள் இலங்கைத் தூதரகத்தின ஊடாக நாடு திரும்பியுள்ளனர். (ச-8)

# போலி முறைப்பாடு செய்வோருக்கு இனி ஒரு இலட்சம் ரூபா தண்டம்!

(கொழும்பு)

போலி முறைப்பாடுகள் செய்து அப்பாவி மக்களைச் சிக்கல்களுக்குள் மாட்டிவிடக்கூடியவர்களுக்கு மிக அதிகமான குற்றப்பணத்தை அறவிடும் வகையில் கிரிமினல் சட்டக்கோவையில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

போலி முறைப்பாடு செய்பவர்களுக்கு இப்பொழுது விதிக்கப்படும் 500 ரூபா தண்டப்பணம் ஒரு இலட்சம் ரூபாவ அதிகரிக்கப்படவுள்ளதாக நீதியமைச்சர் ஜோன் செனவிரத்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கிரிமினல் சட்டக்கோவைக்கான திருத்தத்தின் ஒரு பகுதியிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

போலிக் குற்றச்சாட்டு ஒன்றினால் பலர் பலவிதமான சிக்கல்களுக்கும் பாரதூரமான சங்கடங்கள்,தொல்லைகட்கும் உள்ளாகிறார்கள்.இப்போது இவ்வித போலிக்குற்றச்சாட்டுகளுக்கு விதிக்கப்படும் தண்டப்பணம் 500 ரூபாய் மட்டுமே. இது நியாயமானதல்ல. எனவேதான் இத் தொகையை ஒரு இலட்சம் ரூபாவாக உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடும் குற்றங்களுக்காகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்படக்கூடிய காலப்பகுதியை 48 மணித்தியாலங்களாக அதிகரிப்பது இன்னுமொரு திருத்தமாகும்.

திட்டமிட்ட படுகொலைகள், சுடுகலன்கள் பாவனை மற்றும் கூட்டாகக்கற்பழித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் இவ்வாறு தடுத்துவைக்கப்படுவர். இதறகான அனுமதியை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திற்குக்குறையாத ஒரு அதிகாரி ஒரு மஜிஸ்திரேட்டிடமிருந்து பெறறுக்கொள்ளவேண்டுமென அத்திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. (ந-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மணற்காடு பிரதேசத்தில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்களுக்கு "சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடிழந்ததோருக்கான மீள் புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ்" உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் வீடுகளைப் புனரமைத்துக் கொடுத்தல சம்பந்தமாக ஆராயும் விஷேட கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு குடத்தனைப் பொது மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-19)

★ ★ ★ ★

யாழ். மாவட்டத்தில் கலை கலாசாரப் பேரவை அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி கேட்டுள்ளார். (ந-19)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

தத்துவங்களை நிறுவியவர்கள் அனைவரும் கடும் விரதங்களை மேற்கொண்டு இறையருள் பெற்று, அவன் ஆணைப்படி பல கோட்பாடுகளை உபதேசித்தனர். இவை இறைவனிடமிருந்து தோன்றியவை. ஆனால் அவன் இந்தக் கோட்பாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன்.

சுவாமி விவேகானந்தர்

# உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் உள்ள 53 தேர்தல் பிரதேசங்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் மீண்டும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்துள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களிலும், விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களிலும் தேர்தல் நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்த உள்ளூராட்சித் தேர்தல் தவிர்க்க முடியாத காரணத்தினால் அதே ஆண்டில் செப்ரெம்பர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் 2004 ஆம் ஆண்டிற்கும், அதன் பின்னர் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களும் இடம்பெறவேண்டும் - என்கிறார் ஹக்கீம்

(மன்னார்)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லையென கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களினுடைய அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கி பேச்சுவார்த்தையினை நடாத்தாமல் அரசும், விடுதலைப்புலிகளும் அதனைத் தங்களுடைய ஏகோபித்த உரிமையாக எடுத்துக்கொண்டுள்ளன.

பேச்சுவார்த்தைகளில் அரசும் அரசின் சமாதானச் செயலகமும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகமும் மட்டும் ஈடுபட்டு எடுக்கின்ற தீர்மானங்களை, முஸ்லிம்களின் மேல் திணிக்கும் நடவடிக்கையாகவே பொதுக்கட்டமைப்பு விடயத்தினை நாங்கள் கருதுகின்றோம்.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எம்மைச் சந்திக்கும்போது இவ் விடயங்கள் குறித்து விரிவாகப் பேசவுள்ளோம் எனக் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தைப் பொதுக்கட்டமைப்பில் உள்ளடக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் சார்பாக கேட்கப்பட்டிருப்பதாகதகவல்கள் வெளியாகி யுள்ளன. உண்மையில் அது கொள்கை அடிப்படையில் சற்று முரண்பட்ட விடயமாகும். ஏனெனில், இலங்கையில் கரையோர மாவட்டங்களில் மன்னார் மாவட்டம் மாத்திரம் பாரிய பாதிப்புக்களை சந்திக்கவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமே என அவர்குற்றம்சாட்டியுள்ளார். (ச-04)

# சொல்ஹெய்ம் நேற்று...

சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது மட்டு. அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மட்டு .அம்பாறை மாவட்டத்தளபதி ராம், கோட்டத்தளபதி ரமணன் ஆகியோரும் உடனிருந்தனர்.

இச்சந்திப்புக்களை முடித்துக் கொண்டு மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்திற்குச் சென்று மாவட்ட கண்காணிப்பாளர் பி.ஆர்.ஸ்ரீன் உட்பட கண்காணிப்புக்குழு உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்புக்களின் போது மட்டக்களப்பில் இடம் பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள், கருணா குழுவினரின் தாக்குதல் சம்பவங்கள் குறித்தும் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இச்சந்திப்புக்களின் போது இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் கலந்து கொண்டார்.

இதேவேளை நேற்றுமாலை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் சம்மேளன பிரதிநிதிகளையும் எரிக்சொல்ஹெய்ம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தமிழ்-முஸ்லிம் உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் விடுதலைப்புலிகளிற்கும் முஸ்லிம்களிற்குமிடையிலான உறவுகள் குறித்தும் கலந்துரையாடினார். இச்சந்திப்புக்களினை முடித்துக்கொண்டு நேற்று மாலை எரிக்சொல்ஹெய்ம் கொழும்புக்குத் திரும்பினார். (ச-4,8)

## இலங்கைவங்கி-முக்கிய அறிவித்தல்

எமது யாழ்.மேற்றரக்கிளை, யாழ்.இரண்டாம் கிளை மற்றும் திருநெல்வேலிக்கிளை வாடிக்கையாளருக்கு விரைவான வங்கிச் சேவையை வழங்குவதற்கான புதிய கணனி முறை ஒன்றினை அறிமுகம்செய்ய இருப்பதால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்கிறோம்.

1) எதிர்வரும், சனிக்கிழமை (23-04-2005) அன்று வங்கி திறக்கப்படமாட்டாது.
2) தன்னியக்கப்பணம் வழங்கும் இயந்திரம் (ATM) 21.04.2005 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியிலிருந்து 25.04.2005 திங்கட்கிழமை மு.ப.8மணிவரை மூடப்பட்டிருக்கும்.
3) 21-04-2005 வியாழக்கிழமை காலை 11மணிவரை மட்டுமே வங்கி திறக்கப்பட்டிருக்கும்.

BOC

**உதவிப் பொதுமுகாமையாளர்,**
**இலங்கை வங்கி,**
**வடபிராந்திய அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

## தனியார்...

சேவைகள் இடைநிறுத்தப்பட்டு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

நேற்று மூன்றாவது நாளாக யாழ். முகமாலை ஊடான தனியார் போக்குவரத்து சேவை தடைப்பட்டதன் பயனாக யாழ். முகமாலை சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களில் சன நெரிசல் அதிகமாக காணப்படுகிறது. இதனால் யாழ். முகமாலை ஊடாக பயணம் செய்யும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இருபாலைச் சம்பவத்தைக் கண்டித்து இன்று யாழ். மாவட்டம் முழுவதிலும் தனியார் பஸ் எவையும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடமாட்டாது எனத்தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ச-19)

## இறுதிக் கட்டத்தில்...

விடயத்தை இழுத்தடிப்பதற்காக இருதரப்பினரும் மாறிமாறி குற்றச்சாட்டுக்களை வெளியிட்டனர். இருந்தும் அனுசரணையாளர் என்ற வகையில் எமது பணிகளை நாம்இடைநிறுத்தி வைக்கவில்லை. அவ்வாறு நாங்கள் செயற்பட்டதாலேயே பொதுக்கட்டமைப்பானது இறுதி வடிவத்தினை விரைவில் அடையவுள்ளது.

விடுதலைப்புலிகளும் அரசும் முழு ஒத்துழைப்பினையும் வழங்குவார்களென எதிர்பார்க்கிறேன் என தெரிவித்தார். பொதுக் கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் விலக்கப்படமாட்டார்கள் அவர்களும் பொதுக்கட்டமைப்பினுள் உள்வாங்கப்படுவார்கள் என சொல்ஹெய்ம் உறுதியளித்தார்.

கிழக்கில் கௌசல்யனின் கொலையினைஅடுத்து கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றை மேற்கொள்வதில் அரசாங்கமோ தமிழீழ விடுதலைப் புலிகளோ சம்பந்தப்பட்டிருந்தால் அதனை அவர்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். இல்லையேல் சமாதானத்துக்கும் மூன்று வருடகாலமாக பேணிப் பாதுகாத்துவரும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும் பாதகமாக அமைந்துவிடும் என எச்சரிக்கை விடுத்தார். (04)




# அரசியல்துறை நடுவப் பணியகத்தில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு

அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நேற்றுக்காலை 9 மணியளவில் போராளி சி.கலைப்பிரியன் தலைமையில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

முதன்மைச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்புப் பொறுப்பாளர் நரேஸ் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஏற்றிவைத்தார்.

மாவீரரை நினைவுகூரும் பொதுப்படத்திற்கு இரண்டு மாவீரர்களின் தாயாரான திருமதி விமலா தேவி ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

அன்னைபூபதி அவர்களின் உருவப் படத்திற்கு இரண்டு மாவீரர்களின் சகோதரியான வாணி ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். தூயவன் அரச அறிவியல் கல்லூரியின் அதிபர் அரசண்ணா நினைவுரையினை ஆற்றினார். (ச)

# ஐ.தே.க. அலுவலகத்திலிருந்து பாதாளக் குழு தலைவர் கைது

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரை ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திலிருந்து கைதுசெய்திருப்பதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் பெரேராவின் சிலாபம் அலுவலகத்தை திடீர் சோதனையிட்டதாகவும் அப்போது கடந்த சில காலமாக தேடப்பட்டு வந்த பிரபல பாதாள உலககுழுத்தலைவர் பலத்தர ஜெகத் என்பவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பாதாள உலகக்குழுத்தலைவர் பலத்தர ஜெகத் பல கொலைகள் மற்றும் கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்றும் குட்டிக பிரதேச மக்கள் வங்கி கொள்ளைச் சம்பவத்தில் வங்கியின் முகாமையாளரைக் கொலை செய்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகவும் பொலிசார் கூறினார். (ச)

## ஜனாதிபதி...

இவர்மாலை நாடுதிரும்பவுள்ளதால் அச்சந்திப்பு நடைபெறுமா என்பது குறித்து கூறமுடியாதுள்ளதாக ஜனாதிபதியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை நாளை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச்சந்திப்பின்போது பொதுக் கட்டமைப்புப் பற்றி இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையை நடாத்துவார் எனவும் எதிர்பார்க்கப் படுகின்றது. (ச-04)

## சொல்ஹெய்ம்...

நோர்வேயும் கூட்டாக முயற்சிகளை மேற்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்முனைக்கு விஜயம் மேற்கொண்ட பிரதி இராஜாங்கச் செயலாளர் சுனாமிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பின்னர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள் கட்டமைப்புப் பணிகளை நேரடியாக சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்டமக்களுக்கு சுய தொழிலை ஆரம்பிப்பதற்கான உபகரணங்களையும் கையளித்தார்.

இதேவேளை கிறிஸ்ரினா றொக்கா இன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும்சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். (08)

## மேதினத்தை...

சிகைஒப்பனையாளர் சங்கங்கள், வணிகர் கழகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது. (ச)










நிரஞ்சனாஸ்
சங்கானை
பிரசன்னா, அனு, வடிவேல் நடித்த
காதல் டாட் கொம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே)
21.04.2005 முதல்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
ஜெய் ஆகாஷ், மிஷா, ராஜ்கிரன் நடித்த
செல்வேல்

நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
10.30, 2.30 இற்கு
ஜெய் ஆகாஷ், பிரணதி நடித்த
குருதேவா
மாலை 6.30, 9.30 (பு.நே)
விஜய், ரிமாசென் நடித்த
பகவதி
21.04.2005 முதல் தகதிமிதா

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.